விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 266 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 26 வியாழக்கிழமை (11.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## முன்னாள் ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் இரத்து

### அமுலுக்கு வந்தது சட்டம்



(கொழும்பு)

"முன்னாள் ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்)" சட்ட மூலம் 150 மேலதிக வாக்குகளால்

16ஆம் பக்கம் பார்க்க

## வலிகாமம் வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் தொடர்ந்து தவிர்க்கப்படுவது ஏன்?

### சபையில் சிறீதரன் எம்.பி கேள்வி

(கொழும்பு)

நாட்டில் போர் முடிவடைந்து 16 ஆண்டுகள் கடந்துள்ள பின்னரும், வலிகாமம் வடக்கு பிரதேச மக்களின் மீள்குடியேற்றம் வலிந்து தவிர்க்கப்பட்டு வருவது ஏன்? என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன் கிழமை (10) நடைபெற்ற அமர்வின் போது நிலையியற் கட்டளை 27/2இன் கீழ் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



15ஆம் பக்கம் பார்க்க

### - ஐ.நாவின் தொழில்நுட்ப உதவியுடன் -

# மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறப்படும்

### ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரிடம் விஜித ஹேரத்

*(ஜெனிவா)*

ஐ.நாவின் தொழில்நுட்ப உதவியுடன் உள்நாட்டுப் பொறிமுறை மூலம் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறப்படும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கிடம் தெரிவித்துள்ளார்.

*(16ஆம் பக்கம் பார்க்க)*



## பயங்கரவாதச் சட்டம் தொடர்ந்து பயன்பாடு

### ஐரோப்பிய ஒன்றியம் கவலை

(கொழும்பு)

இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்ந்து பயன்படுத்தப்படுவது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கவலையை வெளியிட்டுள்ளது.

ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வில்

15ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நாவில் இலங்கைக்கு அழுத்தம் இல்லை

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரின்போது கடந்த அரசாங்கங்களுக்குக் காணப்பட்ட அழுத்தம் எமது அரசாங்கத்துக்கு இல்லை என

02ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் வெளிநாடுகளின் தலையீடு நல்லிணக்க முயற்சிகளைப் பாதிக்கும்

### ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சீனா



(ஜெனிவா)

இலங்கையின் மீதான வெளிநாட்டுத் தலையீடு பிரிவினையை உருவாக்குவதோடு இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளைப் பாதிக்கும் என சீனா தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில்இலங்கை

15ஆம் பக்கம் பார்க்க

## மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படும்

### ஐ.நாவில் இந்தியாவின் கோரிக்கைக்கு அமைச்சர் நளிந்த பதில்

(கொழும்பு)

"மாகாண சபைத் தேர்தலை இயலுமான வரை விரைவில் நடத்துவதே அரசின் எதிர்பார்ப்பாக உள்ளது" என்று அமைச்சரவைப் பேச்சாளரும்



16ஆம் பக்கம் பார்க்க

## யாழில் காணிகளை விடுவிக்க நடவடிக்கை

### அமைச்சர் அநுர கருணாதிலக

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்தில் விடுவிக்கப்படாமல் இருக்கும் பொதுமக்களின் காணிகளை முறையாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப்

02ஆம் பக்கம் பார்க்க

## குருக்கள்மடம் அகழ்வு நடவடிக்கை எதிர்வரும் ஒக்ரோபர் ஆரம்பமாகும்

### நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார



(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் குருக்கள்மடம் புதைகுழியின் அகழ்வு நடவடிக்கை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகும் என நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன் கிழமை நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ்

16ஆம் பக்கம் பார்க்க

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில்...

புதன்கிழமை (10) நடைபெற்ற அமர்வின் போது இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரனால் வலிகாமம் வடக்கில் இதுவரை விடுவிக்கப்படாமல் இருக்கும் பொதுமக்களின் காணிகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

யாழ். மாவட்டத்தில் வலிகாமம் வடக்கில் 2010ஆம் ஆண்டில் 12,376 குடும்பங்களைச் சேர்ந்த 42,699 பேர் இடம்பெயர்ந்தவர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் 10,981 குடும்பங்களைச் சேர்ந்த 38,693 பேர் மீள் குடியேற்றப்பட்டிருந்தனர்.

எனினும் 1395 குடும்பங்களைச் சேர்ந்த 4006 பேர் மீள்குடியேற்றப்படாமல் இருக்கின்றனர். இதேவேளை 2009 காலத்தில் 23,850 ஏக்கர் காணி முப்படைகளின் கட்டுப்பாட்டில் இருந்தன.

அவற்றில் பெரும்பாலான பகுதி விடுவிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது 2583 ஏக்கர் பகுதி விடுவிக்கப்பட வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும் இடம்பெயர்ந்த அனைவரையும் அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டும் என்ற கொள்கையிலேயே அரசாங்கம் செயற்படுகின்றது.

இதன்படி சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் ஊடாக அந்தக் காணிகளை மக்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அதேபோன்று மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் போன்ற தேசிய பொருளாதாரத்திற்கு முக்கியமான இடங்களை அபிவிருத்தி செய்யும் பணிகளிலும் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. அங்கு மூடப்பட்டிருந்த வீதிகளும் திறக்கப்பட்டுள்ளன.

இந்த அரசாங்கம் வடக்கு மக்களுக்காக வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக பெருமளவு நிதிகளை ஒதுக்கியுள்ளது. அங்கு பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றது என்றார். (ம-7)

## ஐ.நாவில்...

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை (09) இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இதற்கு முன்னர் செப்ரெம்பரில் ஜெனிவாவில் மனித உரிமைகள் கூட்டத்தொடர் ஆரம்பமானால் அரசாங்கங்கள் எவ்வாறு அழுத்தத்தில் இருந்தன என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் எமது அரசாங்கத்துக்கு அவ்வாறு எந்த அழுத்தமும் இல்லை. கடந்த ஜூனில் நாட்டுக்கு விஜயம் செய்த ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கை எமக்கு சார்பானதாகவே காணப்படுகிறது.

இலங்கையில் மனித உரிமைகள், நல்லிணக்கம், ஜனநாயகம் தொடர்பில் சர்வதேசத்தின் மத்தியில் வரவேற்புக் கிடைத்துள்ளது. குறுகிய காலத்துக்குள் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அரசாங்கம் என்ற ரீதியில் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். எமது நீதிமன்ற கட்டமைப்பின் சுயாதீனத்தன்மை, நம்பிக்கை பல சந்தர்ப்பங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே தேசிய பொறிமுறைக்குள் மனித உரிமை மீறல்கள் குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று நம்புகின்றோம். இது தொடர்பில் சர்வதேசத்தின் மதிப்பீடுகளையும் அங்கீகரிக்கின்றோம். எனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணைகளில் அநாவசிய தலையீடுகளைச் செலுத்தி அவற்றை வீணடிக்க விரும்பவில்லை. அதேவேளை சிறிய அடிப்படைவாத, தீவிரவாத குழுக்கள் தலைதூக்குவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது என்றார். (ம-7)

**67 ஆவது பிறந்ததினமும் 4 ஆம் ஆண்டு நினைவுதினமும்**

**அமரர் யோகராணி செல்வரட்ணராஜா**


பிறப்பு 1958.09.11 — இறப்பு 2021.02.25



தகவல்
கணவன் செல்வரட்ணராஜா
பிள்ளைகள்
தற்காலிக முகவரி
உடுவில் தெற்கு, கர்த்தர் கோவிலடி,
நிரந்தர முகவரி
VCC பத்திநகர், மாவிட்டபுரம், தெல்லிப்பளை.

(5320)

# மரண அறிவித்தல்



மலர்வு 11.02.1930 — உதிர்வு 10.09.2025

## திருமதி சின்னம்மா தம்பிப்பிள்ளை

தென்மராட்சி மீசாலையினைப் பிறப்பிடமாகவும் கச்சாய் தெற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா தம்பிப்பிள்ளை அவர்கள் நேற்று 10.09.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - கற்பகம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் மல்லிகாதேவி, சந்திரசேகரம், கமலாம்பிகை, மனோராணி, குணசேகரம், அருளானந்தம், தனலட்சுமி, கிருபானந்தம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 11.09.2025 வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் தெற்கு எறியால்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

(C-3849)

தகவல்:
குடும்பத்தினர்
077 385 1985

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னார் வைத்தியசாலை மேம்பாட்டுக்காக இந்தியா 600 மில்லியன் ரூபாய் மானிய உதவி

**(கொழும்பு)**

**மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவை நிர்மாணிப்பதற்காகவும், அந்த பிரிவுக்கு மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்காகவும் இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் 600 மில்லியன் ரூபாய் மானிய உதவி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.**

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க ஆகியோர் இதற்கான ஒப்பந்தத்தில் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டனர்.

சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி நளிந்த ஜெயதிஸ்ஸ ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் கலந்து கொண்டார்.

இந்தத் திட்டம் இரண்டு மாடி விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவின் சிவில் கட்டுமானத்தையும், அந்த அலகுக்குத் தேவையான அனைத்து மருத்துவ உபகரணங்களையும் கொள்முதல் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டம் மன்னார் பொது மருத்துவமனையின் A மற்றும் E பிரிவின் முக்கியமான தேவையை நிவர்த்தி செய்யும்.

இது சராசரி தினசரி உட்புற நோயாளிகளின் எண்ணிக்கைக்கும் கிடைக்கக் கூடிய படுக்கை வலிமைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதன் மூலம் மருத்துவமனையில் மருத்துவ வசதிகளை வலுப்படுத்தும். (நி)



## 'Space Fest' கண்காட்சி நாளை

SLIIT NORTHERN UNI ஆனது விண்வெளி விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களுடன் கூடிய Space fest - 2025 கண்காட்சியினை நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இணையம் தொடர்பான காட்சிப்படுத்தல்கள், மெய்நிகழ் உண்மை அமர்வுகள், விமானப் பயணம் தொடர்பான கருத்தமர்வுகளும் காட்சிப் படுத்தல்களும், மாணவர்களுக்கான புத்தாக்க விளையாட்டுக்கள், விண்வெளி வினாவிடை போன்ற பல விடயங்கள் இடம்பெறும். கந்தர்மடம் சந்தியில் அமைந்துள்ள NORTHERN UNI இன் வளாகத்தில் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் என அனைவரும் பார்வையிட முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி)

## 350 பொலிஸ் அதிகாரிகள் கடந்த ஆண்டில் இடைநீக்கம்

(கொழும்பு)

கடந்த ஆண்டில் சுமார் 350 பொலிஸ் அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பொலிஸ் துறையை அரசியலற்றதாக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடு பட்ட அதிகாரிகள் குழு ஒன்று இவ்வாறு இடைநீக்கம் செய்யப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரியில் நடை பெற்ற பயிற்சி பொலிஸ் அதிகாரிகள் குழுவிற்கான பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இதவேளை இந்த நிகழ்வில் பேசிய பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பொலிஸ் சேவைக்குள் நீதியான அதிகாரிகள் குழுவை உருவாக்கு வதே தனது முதன்மையான நோக்கம் என்று தெரிவித்தார். (நி)

## நாட்டை உலுக்கிய எல்ல விபத்து பேருந்து உரிமையாளர் கைது

(கொழும்பு)

எல்ல - வெல்லவாய வீதியில் விபத்துக்குள்ளான பேருந்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேருந்தை முறையாகப் பராமரிக்கத் தவறிய குற்றச்சாட்டிலே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



கடந்த 4 ஆம் திகதி இரவு சுற்றுலா சென்று மீண்டும் திரும்பிக் கொண்டிருந்த தங்காலை நகரசபை ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை ஏற்றிச் சென்ற பேருந்து எல்ல - வெல்லவாய பிரதான வீதியில் 24 ஆவது மைல்கல் பகுதியில் பள்ளத் தாக்கில் கவிழ்ந்து விபத்துக் குள்ளானது.

இந்த விபத்தில் தங்காலை நகரசபையின் செயலாளர் டி.டபிள்யூ.கே. ரூபசேன உட்பட 12 ஊழியர்கள் உயிரிழந்தனர். விபத்தில் காயமடைந்த 17 பேர் பதுளை, பண்டாரவளை மற்றும் தியத்தலாவை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

25 வயதுடைய பேருந்து சாரதியின் அலட்சியத்தால் இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாகப் போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக ஹபுகொட தெரிவித்துள்ளார்.

அவரால் பேருந்தை கட்டுப்படுத்த முடியாமல் போகவே இந்த விபத்து ஏற் பட்டுள்ளதாக இந்திக ஹபுகொட குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில், எல்ல - வெல்லவாய வீதியில் விபத்துக்குள்ளான பேருந்தின் உரிமையாளர் கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

## கட்டுநாயக்க - காத்மண்டு விமான சேவைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கும் நேபாளத்தின் காத்மண்டு நகரத்திற்கும் இடையிலான விமான சேவை கள் நேற்று புதன்கிழமை காலை முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஶ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் ஊடகப் பேச்சாளர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

அதன்படி கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து நேற்று காலை 8:35 மணிக்கு நேபாளத்தின் காத்மண்டு நகரத்திற்கு புறப்படவிருந்த ஶ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் விமானம் UL-181 இரத்து செய்யப் பட்டுள்ளது.

நேபாளத்தில் நிலவி வரும் தொடர் போராட்டம் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஶ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் ஊடகப் பேச்சாளர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். அத்துடன் நேபாளத்தின் அனைத்து விமான நிலையங் களையும் நேபாளத்தின் சிவில் விமானப் போக்குவரத்து ஆணையத்தினால் தற்காலி கமாக மூடப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு ஶ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் 1979 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## சபாநாயகருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை
## ஐ.ம.ச. அறிவிப்பு

(கொழும்பு)

சபாநாயகருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினரு மான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவுக்கு எதிராக எதிர்க்கட்சி சமர்ப்பித்த நம்பிக்கையில்லா பிரேரணை குறித்த முடிவை நேற்று சபாநாயகர், பாராளுமன்றத்தில் முன்வைத்த பின்னரே ரஞ்சித் மத்துமபண்டார இதனை அறிவித்தார்.

எதிர்க்கட்சியின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்காவிட்டால், சபாநாயகருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்படும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

எனினும், இதற்கு பதிலளித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மூலம் எதிர்க்கட்சி ஒரு போதும் சபாநாயகரை தோற்கடிக்க முடியாது என்று பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இதேவேளை பாதுகாப்பு பிரதி அமைச்சர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவுக்கு எதிராக எதிர்க் கட்சிகள் சமர்ப்பித்த நம்பிக்கையில்லா பிரேரணையை ஏற்றுக்கொள்ள முடியாது என சபாநாயகர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

யா/மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பழை
J/Mahajana college - Tellippalai
தரம் - 6 அனுமதி (2026)
(தமிழ், ஆங்கில மொழி மூலம்)
2026 ஆம் ஆண்டின் தரம் - 6 அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
அலுவலக நேரத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்
விண்ணப்ப முடிவுத் திகதி - 24.09.2025
(C-3839) அதிபர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் மானிப்பாயில் 21 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

## நிலப்பரப்பு

- மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 2ஆவது காணி
- மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலிருந்து 600m தூரத்தில் உள்ளது.
- 20 அடி பாதையுடன்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை 55 இலட்சம்




**பார்வையிடும் நேரம்:**

**காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

(5375)

# 077 814 7389 / 077 986 5457

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் இறுதி வரைவு அடுத்த வாரம்

(கொழும்பு)

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை வரைவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் இறுதி வரைவு, அடுத்த வாரம் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை வரைவதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட குழு நேற்று முன்தினம் அமைச்சில் ஒன்று கூடியபோது குழுவின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அர்சகுலரத்ன இதனைத் தெரிவித்தார்.

புதிய வரைவில் மீதமுள்ள சிக்கலான பகுதிகளில் அடையாளம் காணும் பணிகள் இந்த வாரத்தில் முடிக்கப்படும் எனவும், அதற்காக குழு தினமும் கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, குழுவினால் செய்யப்படும் மாற்றங்களை இணைத்து சட்ட வரைஞர் திணைக்களம் சட்டமூலத்தை உருவாக்கும் என்றும் குழு தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில், சட்டமா அதிபர் திணைக்களம், நீதி அமைச்சு உள்ளிட்டவைகளின் சிரேஷ்ட அதிகாரிகள் பங்கேற்றதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.(நி)

## கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய உபகரணங்கள் வழங்கல்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் குறித்தொதுக்கப்பட்ட நிதியம்- 2025 கீழ் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக விவசாய உபகரணங்கள் மற்றும் உள்ளீடு வழங்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

குறித்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில், மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.சோதிலட்சுமி தலைமையில் நடைபெற்றது.

உள்ளூர் விவசாயிகளை ஊக்கப்படுத்துவதன் ஊடாக அவர்களது உற்பத்திகளை அதிகரிக்கும் நோக்கில் குறித்த உபகரணங்கள் மற்றும் உள்ளீடுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் , வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் வடக்கு மாகாண மேலதிக விவசாயப் பணிப்பாளர், வடக்கு மாகாண விவசாயத் திணைக்கள கணக்காளர் , விதை மற்றும் ஆராய்ச்சி பிரிவு உத்தியோகத்தர்கள், பண்ணை உத்தியோகத்தர்கள், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (8-315-316)

## முட்கொம்பன் பகுதியில் மரக்கறி சந்தை திறப்பு!

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேச சபைக்கு உட்பட்ட முட்கொம்பன் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மரக்கறி சந்தை கடை தொகுதி நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச சபைக்கு உட்பட்ட முட்கொம்பன் கிராமத்தில் நீண்ட காலமாக பொதுச்சந்தை கட்டடம் இன்றி வர்த்தகர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்த நிலையில் 2025 ஆம் ஆண்டுக்கான சபை நிதியில் மூன்று மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட மரக்கறி சந்தை கடை தொகுதி நேற்று பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது

இதில் பூநகரி பிரதேச சபையினுடைய தவிசாளர் எஸ்.ஶ்ரீரஞ்சன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து வைத்தார்.

இதில் உபதவிசாளர் மற்றும் பூநகரி பிரதேச சபையினுடைய செயலாளர் சபை உறுப்பினர்கள்,வர்த்தகர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (8-315)


கட்டைவேலி -நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கு அமைவாக எமது சங்கத்தின் புதிய கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுக் கூட்டங்கள் எதிர்வரும் **13.09.2025ந் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு** பின்வரும் விபரப்படியாக நடைபெற உள்ளது. 30.06.2025ந் திகதியில் வாக்களிக்க தகைமை பெற்ற உறுப்பினர்கள் அனைவரும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று தமது கிளையின் பொதுக்கூட்டங்களுக்கு உரிய நேரத்திற்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்**

| தொ. இல | கிளை. இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|---|
| 01 | 01 | அல்வாய் தெற்கு A (மாலிச்சந்தி) | திரு வீரசிங்கம் இரத்தினகாந்தன் | யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் |
| 02 | 02 | அல்வாய் தெற்கு மத்தி (முத்துமாரியம்மன்) | திரு நாகமுத்து ஜெயவதனன் | அறிவு அருள் சனசமூக நிலையம் |
| 03 | 03 | கட்டைவேலி | திரு ஜோசப் ஜெகதாஸ் | யா/ஞானசாரியார் கல்லூரி |
| 04 | 04 | கல்வத்தை | திரு சிங்கராசா சியாந்தன் | யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை |
| 05 | 05 | கனுவில் | திரு பாலச்சந்திரன் பாரவி | வடமராட்சி தெ.மே.பி. சபை பாலர் பாடசாலை நெல்லியடி (கரவெட்டி பிரதேச வைத்தியசாலைக்கு அருகாமை) |
| 06 | 06 | கரவெட்டி மேற்கு (அந்திரான்) | திரு கந்தசாமி சசிகரன் | யா/வதிரி திருஇருதய கல்லூரி |
| 07 | 07 | கரவெட்டி கிழக்கு (தச்சை ஐங்கரன்) | திரு பாக்கியராயா குருபரன் | கிளைக் கட்டிடம் |
| 08 | 08 | கோவிற்கடவை | திரு பொன்னம்பலம் கோகுலன் | கோவிற்கடவை சன சமூக நிலையம் |
| 09 | 09 | நெல்லியடி | திரு சபாரத்தினம் அருள்நாதன் | நெல்லியடி சன சமூக நிலைய சன்மார்க்க பாலர் பாடசாலை |
| 10 | 10 | நுகவில் | திரு பரமசிவம் தவப்பிரியன் | கிளைக் கட்டிடம் |
| 11 | 11 | சந்திரா | திரு வல்லிபுரம் நிதர்சன் | நாமகள் சனசமூக நிலையம் |
| 12 | 12 | சண்டில் | திரு தங்கராசா கண்ணதாசன் | கிளைக் கட்டிடம் |
| 13 | 13 | துன்னாலை தெற்கு (குடவத்தை) | திரு.அமிர்தானந்தசிவம் சஞ்சயன் | கிளைக் கட்டிடம் |
| 14 | 14 | கிளான் | திரு அருளாநந்தம் தயாளன் | யா/துன்னாலை தெற்கு அ.த.க.பாடசாலை |
| 15 | 15 | வதிரி | திரு ஜெயபாலன் சதீஸ் | வடமராட்சி தெ.மே.பி. சபை பாலர் பாடசாலை வதிரி |
| 16 | 16 | யாக்கரு | திரு கனகரத்தினம் திஷாகரன் | யா/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் |
| 17 | 19 | துன்னாலை வடக்கு A (வல்லியானந்தம்) | திரு சோமசுந்தரம் தங்கேஸ்வரன் | வல்லியானந்தம் சனசமூக நிலையம் |
| 18 | 20 | துன்னாலை வடக்கு B (துன்னாலை மத்தி) | திரு கணபதிப்பிள்ளை செந்தூரன் | யா/துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் |
| 19 | 21 | அல்வாய் தெற்கு B (மனோகரா) | திரு சந்திரலிங்கம் சுவர்ணன் | மனோகரா பாலர் பாடசாலை |
| 20 | 23 | கிழவித்தோட்டம் | திரு விநாசித்தம்பி சிவபாலன் | கிழவித்தோட்டம் சனசமூக நிலையம் |
| 21 | 24 | இராசகிராமம் | திரு இராஜசிவம் தனுசன் | இராசகிராமம் சனசமூக நிலையம் |
| 22 | 25 | வதிரி வடக்கு (டைமன்) | திரு கணேசு சுரேஸ்பாபா | வதிரி தமிழ் மன்ற நூலகம் |
| 23 | 30 | அல்லையம்பதி | திரு சிவசிதம்பரம் சிறிதரன் | அல்லையம்பதி பாலர் பாடசாலை |

11.09.2025
கட்.நெல்.ப.நோ.கூ. சங்கம் - கரவெட்டி. (C-3844)

ஆறுமுகம் சங்கர்
பதில் செயலாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு மாவட்டத்தில்
# வெளிச்சவீடு இன்மையால் மீனவர்கள் பாதிப்பு
### ரவிகரன் எம்.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் வெளிச்சவீடு இன்மையால் மீனவர்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருவதாக வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.**



பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடற்றொழில் அமைச்சின் ஆலோசனைக்குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மணற்குடியிருப்பு கடற்கரைப்பகுதியில் கடந்த 1950 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்டப்பட்ட வெளிச்ச வீடொன்று காணப்பட்டது.

இந்த வெளிச்சவீட்டினால் முல்லைத்தீவு மாவட்டத்தின் 74 கிலோமீற்றர் தூரமான கரையோரத்தில் கொக்கிளாய் தொடக்கம் பேப்பாரப்பிட்டி வரையிலுள்ள மீனவர்கள் பயனடைந்து வந்தனர்.

குறித்த வெளிச்சவீட்டின் உதவியுடனேயே மீனவர்கள் தொழிலுக்குச் சென்று தமது மீன்பிடித் துறைகளுக்கு கரை திருப்பி வந்தனர்.

இவ்வாறாக மீனவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாகவிருந்த இந்த வெளிச்சவீடு கடந்த 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்துடன் முற்றாக அழிவடைந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது மீனவர்கள் வெளிச்சவீடின்றி பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

எனவே மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு கடற்றொழில் அமைச்சு முல்லைத்தீவில் வெளிச்ச வீடொன்றை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுத்தார்.

இந்நிலையில் வெளிச்சவீடு அமைப்பது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானமொன்றை நிறைவேற்றி அனுப்புமாறும், குறித்த வெளிச்ச வீடு அமைப்பது தொடர்பில் தம்மால் நடவடிக்கை எடுக்கப்படுமென கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் மற்றும் பிரதி அமைச்சர் ரத்ன கமகே ஆகியோரால் தெரிவிக்கப்பட்டது. (8)

## அமரர்.பொன்.சிவபாலனின் 27 ஆவது ஆண்டு நினைவு தினம்



(யாழ்ப்பாணம்)

முன்னாள் யாழ். மாநகர சபை முதல்வரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறைச் செயலாளருமான அமரர் பொன். சிவபாலனின் 27 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று ஆகும். 1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி யாழ். மாநகரசபை நல்லூர் கல்யாண மண்டபத்தில் மாநகர போக்குவரத்து சம்பந்தமாக உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது கூரைமேல் வைக்கப்பட்ட கிளைமோர் தாக்குதலில் பொன்.சிவபாலன் கொல்லப்பட்டார்.

அவருடன் யாழ். நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுசந்த மெண்டிஸ், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திரா பெர்னாண்டோ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திர மோகன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சரத் பெர்னாண்டோ, யாழ். தலைமையக பொலிஸ் அதிகாரி மோகனதாஸ், யாழ். நகர பிரிகேட் மேஜர் கப்டன் ராமநாயக்க, பொலிஸ் கான்ஸ்டபிள் ஜெராட், யாழ். மாநகர சபை உதவி ஆணையாளர் பத்மநாதன், வேலைப்பகுதிப் பொறியியலாளர் ஈஸ்வரன், கட்டட வரைபடக் கலைஞர் திருமதி மல்லிகா இராஜரட்ணம், தட்டெழுத்தாளர் பத்மராஜா ஆகியோர் அடங்கிய பன்னிரண்டு பேர் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

பொன்.சிவபாலன் தமிழர் விடுதலைக் கூட்டணியினை பிரதிநிதித்துவப்படுத்தி யாழ். மாநகரசபையின் முதல்வராக பணியாற்றியதுடன் பிரபல சட்டத்தரணியுமாக விளங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

## நாவல் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றிய செயலாளர் தீபச்செல்வனின் சயனைட் நாவல் அறிமுக நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (3)

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

### யா/வலி/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி

கா.வேதூஷியா-179, த.கேனுயன்-162, ம.அபிசனா-145, அருளானந்தன் சாமுவேல் எபநேசர்-143, த.யசிக்கா-140, சி.அக்ஷயா-136, சு.றதீஸ்-136

### யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்

பா.சமிகா, சு.ரஜிகரன், கு.சகானா, சி.சாகித்ஜன், இ.பவிலாசினி, ம.சௌத்திரியன்

## புலமைப்பரிசில் பரீட்சை
### செட்டித்தெரு மெதடிஸ்த மிஷன் சாதனை

(அராலி)

செட்டித்தெரு மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை வெளியாகிய புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை படைத்துள்ளது.

குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் 30 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றியிருந்த நிலையில் 10 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சாதனை படைத்துள்ளனர். (8-104)

## மோட்டார் சைக்கிள்-துவிச்சக்கரவண்டி விபத்து-மருதனார்மடத்தில் சம்பவம்

(அராலி)

யாழ்ப்பாணம் - மருதனார் மடப்பகுதியில் நேற்றையதினம் மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கரவண்டியும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை வீதி மருதனார் மடம் பகுதியில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த துவிச்சக்கர வண்டி ஒன்று வீதியை கடக்க முற்பட்ட வேளை பின் பக்கமாக வந்த மோட்டார் சைக்கிள் அந்த துவிச்சக்கர வண்டி மீது மோதியது. பின்னர் அந்த மோட்டார் சைக்கிள் நிலை குலைந்து எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிள்கள் மீதும் மோதியது.

இவ் விபத்தில் சிக்கியவர்கள் சிறிய காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர். விபத்து சம்பவம் குறித்தான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-104-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 250 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 210 | 200 | 180 | 250 |
| பச்சைமிளகாய் | 100 | 150 | 120 | 160 |
| தக்காளி | 100 | 150 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 230 | 200 |
| கோவா | 150 | 250 | 220 | 300 |
| கரட் | 380 | 300 | 260 | 400 |
| பூசணி | 80 | 50 | 50 | 50 |
| புடோல் | 180 | 150 | 100 | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 150-350 | 250 | 250 | 320 |
| பெரிய வெங்காயம் | 180 | 150 | 150 | 160 |
| பாகற்காய் | 600 | 400 | 350 | 400 |
| வெண்டக்காய் | 140 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 330 | 250 | 250 | 350 |
| பயற்றங்காய் | 280 | 300 | 350 | 400 |
| லீக்ஸ் | 250 | 300 | 180 | 200 |
| பீற்றூட் | 80 | 200 | 100 | 150 |
| கறிமிளகாய் | 350 | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 350 | 300 | 280 | 300 |
| போஞ்சி | 500 | 350 | 350 | 500 |
| கத்தரிதம்புள்ள | 100 | 300 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 40-120 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 550 | 600 | 850 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 150 | 120-200 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 600 | 400 | 1200 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 150 | 400 |
| முள்ளங்கி | 150 | 150 | 100 | 250 |
| பொன்னாங்காணி | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 200 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உப்பு அறுவடை செய்து வரும் நெல் விவசாயிகள்



(தருமபுரம்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் பகுதியில் உள்ள வயல் நிலங்கள் உவர் நிலமாக மாறுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மண்டைக் கல்லாறு உவர்நீர் தடுப்பணை இல்லாமையால் கடல்நீர் வயல் நிலங்களுக்குள் உட்செல்வதனால் உவர்த்தன்மை அடைந்து வருகின்றன.

இதனால் விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபடுவதைக் கைவிட்டுள்ளனர்.

தற்போது வயல் நிலங்களில் உப்பு விளைந்து காணப்படுகின்றது.

இதன் காரணமாக தமது வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் நெல் அறுவடை செய்த பகுதிகளில் உப்பு அறுவடையில் ஈடுபட்டு வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளார்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உவர்நீர் தடுப்பினை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-316)


# மணிவிழா வாழ்த்து




செல்வி. தவறஞ்சினி பொன்னம்பலம்

சேவை விபரம்

- யா/கட்டுவன்புலம் மகா வித்தியாலயம் 1989.01.20 - 1993.02.28
- யா/பலாலி ஆசிரிய கலாசாலை 1993.03.01 - 1994.12.31
- யா/கட்டுவன்புலம் மகா வித்தியாலயம் 1995.01.01 - 1997.06.17
- யா/அருணோதயா கல்லூரி 1997.06.18 - 1997.12.31
- திரு/புனித பிரான்சிஸ் சவேரியார் ம.வி 1998.01.01 - 2002.12.31
- யா/மயிலணி மகா வித்தியாலயம் 2003.01.01 - 2005.05.29
- யா/பொன்பரமானந்தர் மகா வித்தியாலயம் 2005.05.30 - 2009.01.28
- யா/ இராமநாதன் மகளிர் கல்லூரி 2009.01.29 - 2010.06.14
- யா/ சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தி (அதிபர்) 2010.06.15 - 2021.04.26
- யா/ நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தி (அதிபர்) 2021.04.27 - 2025.09.10

(5362)

புதன்கிழமை அன்று தனது சேவையை நிறைவு செய்து மணிவிழாவைக் கொண்டாடுகின்ற எமது பாடசாலை அதிபர் செல்வி. தவறஞ்சினி பொன்னம்பலம் அவர்களுக்கு எமது வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமையப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்-

பாடசாலைச் சமூகம்

யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்


# நல்லூரில் இலவச யோகக்கலை கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் காலை 8 மணிவரை நடைபெறும். இவ் வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ள முடியும். சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன. பயிலவிரும்புவோர் ஆரம்பமாகவுள்ள தினத்தில் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (3)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம் 143/15, மூளாய் வீதி, வட்டாரம்-04

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுலகத்திற்குட்பட்ட வட்டாரம் 04, மூளாய் வீதியிலுள்ள இல 143/15 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **சொந்தக்காரர்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **நாகலிங்கம் இரத்தினசாமி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.நாகலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7759/01.01.1949 ஆம் இலக்க உறுதியால் **வேலுப்பிள்ளை நாகலிங்கம் கைம்பெண் ஆச்சித்தாய்** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் குறித்த ஆதனத்திற்குரிய அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது, குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**கார்த்திகேசு கந்தசாமி கதிர்வேல்நாதன்** ஆகியவர் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு P.V சிறீரங்கன் முகதாவில் 79/18.11.1990 ஆம் இலக்க உறுதியால் குறித்த **நாகலிங்கம் இரட்ணசாமி** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த **கார்த்திகேசு கந்தசாமி கதிர்வேல்நாதன்** காலஞ்செல்ல குறித்த ஆதனமானது கந்தசாமி கதிரவேல்நாதன் கைம்பெண் லோகேஸ்வரி ஆகியவருக்கு தாரப்பங்கும், தேடிய தேட்டமுமாகவும், கிருஷ்ணதாசன் பெண் மாலதி ஆகியவருக்கு பிதாவழிமுதுசமாகவும் வந்தடைந்தது.

**சபாபதி சின்னையாவும் பெண் புஸ்பமலரும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5602/07.02.2004 ஆம் இலக்க உறுதியால் குறித்த **சிவகணேசமூர்த்தி கிருஷ்ணதாசனும் பெண் மாலதியும், கந்தசாமி கதிரவேல்நாதன் கைம்பெண் லோகேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர் : **"தரும்பையப்புலம்"**
இறை : **வட்டுக்கோட்டை மேற்கு**
வீஸ்தீரணம் : **நில.பர 5 1/4**
எல்லைகள் : **கிழக்கு** - கந்தன் பாலனுக்கும் பெண் நாகம்மாவுக்குமுரிய ஆதனம்,
**வடக்கும், மேற்கும்** - தில்லையம்பலம் பெண் நாகம்மாவின் ஆதனம்
**தெற்கு** - மூளாய் பிள்ளையார் கோவிலுக்குரிய ஆதனமும், பிற ஆதனமும்.

குறித்த **சபாபதி சின்னையாவும் பெண் புஸ்பமலரும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **சபாபதி சின்னையாவும் பெண் புஸ்பமலரும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தவிசாளர்/செயலாளர்
வலிகாமம் மேற்கு பிரதேசசபை

(5372)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



வசந்தன் ஆருக்ஷன்

யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி

புள்ளி - 174

கோட்ட மட்டம் - முதலிடம்

(கோப்பாய் கோட்டம்)

2025 புலமைப்பரிசில் பரீட்சையில் 174 புள்ளிகளைப் பெற்று கோப்பாய்க் கோட்டத்தில் முதல் நிலை மாணவனாகத் தெரிவாகி இருக்கும் எமது செல்வம் ஆருக்ஷன் அவர்களை மேலும் பல வெற்றிகள் பெற்று நீடூழி காலம் வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்: **அம்மா, அப்பா, அண்ணா, அம்மம்மா, தாத்தா, அப்பம்மா, மாமா, அத்தை, மச்சான்மார், சித்திமார், சித்தப்பாமார் அக்கா, தங்கைமார்**

(1539)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாரதம்

# கட்டார் மீது இஸ்ரேல் அதிரடித் தாக்குதல்!

## மத்திய கிழக்கில் அதிகரிக்கும் பதற்றம்

**(டோஹா) கட்டாரிலுள்ள ஹமாஸ் ஆயுதக்குழுவின் அரசியல் பிரிவு தலைமையகத்தை குறி வைத்து இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியது.**



கட்டார் தலைநகர் டோஹாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் தலைமையகம் செயற்பட்டு வருகிறது.

காசா போர் நிறுத்தம், பிணைக்கைதிகள் விடுதலை குறித்து கட்டார் அரசு மூலம் இஸ்ரேலிடம் அங்கிருந்தபடி ஹமாஸ் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

இந்நிலையில் டோஹாவில் உள்ள ஹமாஸ் ஆயுதக்குழுவின் அரசியல் பிரிவு தலைமையகத்தை குறிவைத்து இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 2 பேர் உயிரிழந்தனர்.

இந்த சம்பவத்துக்கு கட்டார் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. கட்டார் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மஜித் அல்-அன்சாரி வெளியிட்ட அறிக்கையில், இஸ்ரேலின் இந்த நடவடிக்கை கோழைத்தனமானது.

கட்டாரின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மையை குறிவைக்கும் எந்தவொரு நடவடிக்கையும் பொறுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

இந்த குற்றம் அனைத்து சர்வதேச சட்டங்கள் மற்றும் கொள்கைகளையும் அப்பட்டமாக மீறுவதாகும்.

இது கட்டாரின் குடிமக்கள் பாதுகாப்பிற்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.

பிராந்தியத்தின் பாதுகாப்பை தொடர்ந்து குறைமதிப்பிற்கு உட் படுத்தும் இஸ்ரேலின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இது குறித்து உயர்மட்ட விசாரணை நடந்து வருகிறது" என்று தெரிவித்தார்.

இந்த தாக்குதலுக்கு ஈரான், சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகளும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கை சர்வதேச சட்டத்தை ஆபத்தான முறையில் மீறுவதாக ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் எஸ்மாயில் பக்காய் தெரிவித் துள்ளார்.


அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், "இது மிகவும் ஆபத்தானது.

இந்தக் குற்றச்செயல் அனைத்து சர்வதேச சட்டங்கள் மற்றும் விதிமுறைகளையும் அப்பட்டமாக மீறுவதாகும்.

கட்டாரின் தேசிய இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை மீறுவதாகவும் உள்ளது" என்று தெரிவித்தார். (நி)

# ரஷ்ய ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியது போலந்து

## உக்ரைன் போரில் அடுத்த திருப்பம்



(வர்ஸா) உக்ரைன் போரில் அடுத்த கட்டமாக தங்கள் நாட்டில் ஊடுருவிய ரஷ்ய ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியதாக போலந்து அறிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் கடும் எதிர்ப்பை மீறி உக்ரைன் மீதான போரை ரஷ்யா தொடர்ந்து நடத்தி வருகிறது.

போரை முடிவுக்கு கொண்டு வருவதற்காக பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்கு இதுவரை பலன் எதுவும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் ரஷ்யாவின் தாக்குதல் நாளுக்கு நாள் உக்கிரம் அடைந்து கொண்டே செல்கிறது.

ஆளில்லாத ட்ரோன் உதவியுடன் உக்ரைன் மீது அன்றாடம் குண்டு மழை பொழிகிறது ரஷ்யா. இவ்வாறு குண்டு வீசிய டிரோன்கள் சில, அண்டை நாடான போலந்துக்குள் ஊடுருவி விட்டன.

இதைக் கண்டறிந்த போலந்து இராணுவம் அவற்றை உடனடியாக சுட்டு வீழ்த்தியது.

போலந்து, ரஷ்யாவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துள்ள நாடு. நேட்டோ இராணுவ கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள முக்கிய உறுப்பினராகும்.

இந்தக் கூட்டமைப்பில் ஒரு நாட்டுக்கு எதிரான தாக்குதல் அல்லது போர் செயற்பாடு, ஒட்டுமொத்த கூட்டமைப்புக்கும் எதிரான செயல் என்று கருதப்படும்.

அந்த நாட்டுக்கு ஆதரவாக, அனைத்து நாடுகளும் போரில் களம் இறங்க வேண்டும் என்பது நேட்டோ கூட்டமைப்பின் உடன்பாடு.

இதனால் போலந்துக்குள் ரஷ்ய ட்ரோன்கள் ஊடுருவியது, ஐரோப்பிய நாடுகளில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு நேட்டோ கூட்டமைப்பு தக்க பதிலடி கொடுக்க வேண்டும் என்று உக்ரைன் மற்றும் போலந்து நாடுகள் வலியுறுத்தி உள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# இஸ்ரேலுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும்!

## கட்டார் ஆவேசம்

**(டோஹா)..............**

**ஹமாஸ் தலைவர்களை குறி வைத்துக் கட்டார் தலைநகர் டோஹாவில் இஸ்ரேல் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளது.**

**இதற்கு தக்க பதிலடி கொடுக்கப் படும் எனக் கட்டார் அரசாங்கம் அறிவித்துள்ளது.**

இந்தத் தாக்குதல் தமது அமைதிப் பேச்சுவார்த்தைக் குழுவை குறி வைத்து நடத்தப்பட்டதாக ஹமாஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், அந்நாட்டில் உள்ள அமெரிக்க பிரஜைகளை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு கட்டாரில் உள்ள அமெரிக்க தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன் சமூக ஊடகங்களைக் கண்காணிக்குமாறும் அமெரிக்க பிரஜைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த தாக்குதல்களை மோசமான குற்றம் என கட்டார் அரசாங்கம் கண்டித்துள்ளது.

சமாதான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய படையினரின் இந்த நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் இதற்கான பதிலடி கொடுக்கப் படும் எனவும் கட்டார் தெரிவித்துள்ளது.

மக்கள் குடியிருப்புகளுக்கு மிக அண்மையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக கட்டார் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச சட்டங்களை கண்மூடித்தனமாக மீறி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளதகாவும் நாட்டு மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப் படும் எனக் கட்டார் குறிப்பிட்டுள்ளது. (நி)





## மக்ரோனின் நெருங்கிய நண்பர் பிரான்ஸ் பிரதமராக நியமனம்



(பாரிஸ்)

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தனது நெருங்கிய நண்பரான செபாஸ்டின் லெகோர்னை புதிய பிரான்ஸ் பிரதமராக நியமித்துள்ளார்.

நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேற்றப்பட்டு 24 மணித்தியாலங்களுக்குப் பின்னர் இந்த நியமனம் வழங்கப் பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் கீழ் நியமிக்கப்படும் ஆறாவது பிரதமர் செபாஸ்டின் ஆவார்.

லெகோர்னுவின் நியமனம் இடதுசாரி மற்றும் வலதுசாரி எதிர்ப்பாளர்களால் கண்டிக்கப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி)

## இந்தியா, சீனாவுக்கு அதிக வரி விதிக்குமாறு அமெரிக்கா வலியுறுத்து

(வோஷிங்டன்)

இந்தியா, சீனாவுக்கு அதிக வரியை விதிக்குமாறு ஐரோப்பிய கூட்டமைப்புக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கி வருவதால் இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா 50 சதவீத வரி விதித்தது.

இந்தியா எண்ணெய் வாங்குவதன் மூலம் அந்த நிதியை உக்ரைன் போரில், ரஷ்யா பயன்படுத்துவதாக, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் குற்றம் சாட்டி வருகிறார். அமெரிக்காவின் இந்த நடவடிக்கையால் இந்தியாவுடனான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதியும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், அமெரிக்காவின் இந்த மிரட்டலுக்கு அடிபணியாத இந்தியா தொடர்ந்து ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய்யை வாங்கி வருகின்றது.

இந்த நிலையில், இந்தியா, சீனாவுக்கு அதிக வரியை விதிக்குமாறு ஐரோப்பிய கூட்டமைப்புக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

அந்தவகையில் ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு அழுத்தம் தர இந்திய மற்றும் சீன பொருட்களுக்கு அதிக வரி விதிக்க வேண்டும் எனவும் குறிப்பாக சீனாவுக்கு 100% வரி, இந்தியாவுக்கு அதிகபட்ச வரி விதிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 106 நீதித்துறை அதிகாரிகள் ஒரே தடவையில் இடமாற்றம்

(கொழும்பு)

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மொத்தமாக 106 நீதித்துறை அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக நீதிச் சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த இடமாற்றத்தில் மாவட்ட நீதிபதிகள், நீதவான்கள் மற்றும் நீதிமன்ற பதிவாளர்கள் ஆகியோர் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# மொரட்டுவ முன்னாள் மேயர் கைது

(கொழும்பு)



மொரட்டுவ நகராட்சி மன்றத்தின் முன்னாள் மேயர் சமன் லால் பெர்னாண்டோ இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்தின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவ நகராட்சி மன்றத்தின் சாலை மேம்பாட்டுத் திட்டங்களை தனிப்பட்ட நபர்களுக்கு வழங்கியதன் மூலம் அரசாங்கத்திற்கு நிதி இழப்பை ஏற்படுத்திய குற்றச்சாட்டுகள் தொடர்பாக கைது செய்யப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1982- இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>2இல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: O/L,Business<br>எதிர் பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: B/16012 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>8இல்செவ்<br>கி-பா-23<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, IT<br>தொ.இ: G/16009 |
| பிறப்பு:1993-இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>கி-பா-27 1/2<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்-BA, MSc, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச /தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/16013 | பிறப்பு-1993-இந்து<br>நட்சத்திரம்-திருவோணம்<br>12இல்சூரிசெவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc,MSc,Health Research Assistant<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு (கனடா)<br>தொ.இ: G/16018 |
| பிறப்பு:1988-இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்:5"<br>தகைமை/தொழில்: A/L,Hotel(pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16014 | பிறப்பு-1999-இந்து<br>நட்சத்திரம்-கேட்டை<br>கி.பா -29 1/2<br>தகைமை/தொழில்: BSc(IT), Engineer<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, IT<br>தொ.இ: G/16023 |
| பிறப்பு: 1984-இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>1இல்செவ்<br>கி-பா-41 3/4<br>உயரம்:5'10"<br>தகைமை/தொழில்: HND IT, Business<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16015 | பிறப்பு-2000-இந்து<br>நட்சத்திரம்:மூலம்<br>12இல்சூரிசெவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்-O/L,Beautician<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/16024 |
| பிறப்பு: 1995- இந்து<br>நட்சத்திரம்-ரேவதி<br>2இல்செவ்<br>உயரம்:6"<br>தகைமை/தொழில்: BBM,Work(pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16016 | பிறப்பு - 1997 - இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BSc,MSc. விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு - அரசதொழில்.வெளிநாடு<br>தொ.இ: G/16025 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 440



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# மதுவை மறக்கலாம்!

"ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு விதத்திலே சாதனை செய்ய வேண்டும் என்று ஆசை இருக்கும். ஒருவருக்கு மது குடிப்பதிலே சாதனை செய்ய வேண்டும் என்று ஆசை! என் அளவுக்கு யாரும் குடிக்க முடியாது என்று சவால் விட்டார்.

ஒரு மதுபானக்கடையிலே போய் நின்றுகொண்டு அவர் பாட்டுக்கு வாங்கிக் குடித்துக் கொண்டே இருந்தார். ஒரு அளவுக்கு மேலே போனதற்கு பிறகு, அவருக்கு ஒன்றும் புரியவில்லை. நிதானம் தவறிப் போனது! அப்படி இருந்தும் இன்னொரு "கிளாஸ்" கொடு என்று வாங்கினார். எப்படியும் அதை குடித்துவிட வேண்டும் என்று முயற்சி செய்தார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. பக்கத்திலே நின்றவரிடம். "என்னுடைய வாய் எங்கே இருக்கு என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் கொஞ்சம் பார்த்து சொல்லுங்களேன். இந்த மதுவை அதிலே ஊற்ற வேண்டும்!"என்றார்.

உடனே அந்த நபர். "இது என்ன கேள்வி? உன்னோட வாய் உன் தலையிலே தான் இருக்கு!" என்றார்.

உடனே இவர்." ஓ.. அப்படியா விடயம். கண்டுபிடித்து சொன்னதற்கு ரொம்ப நன்றி என்று சொல்லிவிட்டு அந்த மதுவை அப்படியே தன் தலையிலே ஊற்றிக் கொண்டார்!

தலையிலேதானே வாய் இருக்கு என்று சொன்னார். அதனாலே அங்கே கொண்டு போய் ஊற்றிக் கொண்டார். அது மட்டுமில்லை. அப்பாடா... குடிச்சாச்சு...இன்னொரு கிளாஸ் கொடு என்று கேக்க ஆரம்பித்தார்! எப்படி இருக்கு இந்தக் கதை? இது கதை இல்லை! நிஜமாக நடக்கக் கூடிய விடயம்தான்!

இப்படிப்பட்ட நபர் ஒருவரை எனக்குத் தெரியும்! அவர் திடீர் என்று ஒரு நாள் வந்து, என் முன்னாடி நின்று "சார். இப்ப நான் மதுப்பழக்கத்தை அடியோடு விட்டுவிட்டேன்" என்றார். "அது எப்படி முடிந்தது உங்களாலே?" என்று கேட்டேன். அவருக்கு யாரோ ஒருவர் "அறிவுரை" செய்தார். ஒரு சில நல்ல பழக்கத்தை வழக்கத்துக்குக் கொண்டு வந்துவிட்டால் மதுவை மறந்துவிடலாம் என்று! அதுமாதிரியே செய்தாராம். இப்ப மதுபானக் கடை பக்கமே போவதில்லையாம்!

அது என்ன, அந்த நல்ல பழக்கம். சொல்லுங்கள்? மற்றவர்களுக்கும் உபயோகப்படும் என்றேன். அவர் ஒவ்வொன்றாக சொன்னார். பத்து குறிப்புகள் சொன்னார். அது என்னென்ன தெரியுமா? தினமும் காலையிலே இளஞ்சூடான நீரிலே பழச்சாறு கலந்து சாப்பிட்டு வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும்!

தினமும் இரண்டு வேளை குளிக்கவேண்டும். ஒவ்வொரு தடவையும் குளித்தவுடனே வெந்நீர் அல்லது எலுமிச்சை ஜூஸ் சாப்பிட வேண்டும். ஒரு சாப்பாட்டுக்கும் இன்னொரு சாப்பாட்டுக்கும்' இடையிலே 8 லிருந்து 10 டம்ளர் வரைக்கும் தண்ணீர் குடிக்க வேண்டும்.

சில குறிப்பிட்ட இடங்களிலே உட்கார்ந்தால் கொஞ்சம் மது அருந்தலாமா என்று தோன்றும்! மனது உங்களைத் தூண்டும்! சாப்பாட்டுக்கு பிறகு அதுமாதிரி இடங்களிலே உட்காரக் கூடாது! சாப்பிட்டவுடனே வெளியே போய் ஒரு 5 நிமிஷம் காலாற நடந்துவிட்டு வரவேண்டும்! சில நண்பர்கள் வீட்டுக்குப் போனால் உடனே மது கிளாஸை எடுத்து நீட்டுவார்கள். அது ஒரு உபசரிப்பு! அப்படிப்பட்ட நண்பர்கள் வீட்டுக்குப் போகக்கூடாது. மது அருந்தும் இடங்களுக்கும் போகக்கூடாது. கொஞ்சம் மது சாப்பிடலாம் என்று தோன்றும் போது உடனே என்ன செய்ய வேண்டும் இன்னொரு தரம் குளிக்க வேண்டும்! டீ, காபி, புகையிலை, வாசனைத் திரவியங்கள், இனிப்பு வகைகள், மீன், பொறித்த உணவு வகை, சிகரெட் இதெல்லாம் தவிர்த்துவிட வேண்டும்.

புரதச்சத்து அதிகமுள்ள ஆகாரம் - பிறகு பழம், பால், தயிர், தேன், பழச்சாறு, காய்கறிகள் இதெல்லாம் அதிகமாக சாப்பிடலாம்.

தியானம், யோகாசனம் இது இரண்டும் ரொம்ப உதவியாக இருக்கும். இழந்த தேக பலத்தையும், மன பலத்தையும் இது மூலமாக மீட்கலாம். மதுப் பழக்கத்திலேயிருந்து விடுபடறதுக்கு இது ஒரு நல்ல வழியாம். ஒரு விருந்து நடந்துகொண்டிருந்தது. அதிலே ஒருவர் இன்னொருத்தரிடம் ஒரு கிளாஸ் மதுவைக் கொடுத்து சாப்பிடுங்கள் என்று கட்டாயப்படுத்திக் கொண்டிருந்தார். ஆனால் அவர் முடியவே முடியாது என்று மறுத்துக்கொண்டிருந்தார். அவர் உறுதியா சொன்னார். "சார். இப்படி மது அருந்தச் சொல்லி என்னைக் கட்டாயப் படுத்தாதீர்கள். இதை வேண்டாம் என்று மறுப்பதற்கு மூன்று காரணங்கள் இருக்கிறது!

முதல் காரணம். மது சாப்பிவது கெடுதல் என்று ஒரு புத்தகத்திலே படித்திருக்கிறேன். இரண்டாவது காரணம்: நான் மது சாப்பிடுவது இல்லை என்று என் மனைவியிடம் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன். மூன்றாவது காரணம்: இப்போது நான் மது சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்." என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தரிச் செய்கை அறுவடை விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட சமுதாய மேம்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில், தானியங்கி நுண்நீர்பாசனத்தில் வெற்றி கரமாக செய்கை பண்ணப்பட்ட கத்தரிச்செய்கை அறுவடை விழா சிறப்புற நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் அறிவியல்நகரில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் சேவையை சமூகத்திற்கு வழங்கும் ஓர் அங்கமாக குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி திருவையாறுப் பகுதியில் கோவிப்பிரியன் விவசாயி வயலில் நேற்று முன்தினம் குறித்த நிகழ்வு நடைபெற்றது.



விவசாய பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர். க.பகீரதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். மேலும் சிறப்பு விருந்தினர்களாக யப்பான் நாட்டு பேராசிரியர்.ரோறு ரமிர்ஸ்னாகா, இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளன தலைவர் மு.சிவமோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் விவசாய பீட விரிவுரையாளர்கள், விவசாய பீட பண்ணை முகாமையாளர், கிராமசேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். (8)

# 'Fems' வழங்கும் நாடியின் 'தமிழச்சி'- நம்பிக்கைக்கு மகுடம், இதயங்களின் சங்கமம்

இவ் இலங்கை மணித்திருநாட்டின் மங்கையருக்கு என்று ஓர் தனித்துவமுண்டு. உலகளாவிய ரீதியில் இன்றளவும் அவர்கள் படைத்த சாதனைகள் ஏராளம். அதிலும் நம் தமிழ்ப்பெண்கள் அழகில் மாத்திரமல்ல, திறமையிலும் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல. அன்றே மைக்கேல் ஜாக்சனுடன் சரிக்கு சமமாக நடனமாடிய கலாநிதி யமுனா சாங்கரசிவமாக இருக்கட்டும் சரி அல்லது இன்று ஹொலிவூட்டில் மிளிரும் மைத்ரேயி ராமகிருஷ்ணனாக இருக்கட்டும் சரி, எல்லோரும் நம் நாட்டு வம்சாவளி வந்தவர்களாக அல்லது வேறு நாடுகளுக்கு இடம்பெயர்ந்தவர்களாக இருந்தே சாதிக்க வேண்டிய நிலை. எந்தத்துறையாக இருந்தாலும் இலங்கையில் இருந்த வண்ணமே உலக கவனத்தை ஈர்ப்பது இலங்கை வாழ் தமிழ்ப் பெண்களுக்கு சற்றே கடினமான காரியம் ஆக இருக்கின்றது.

இதற்காகவே இன்றைய நாளிலும் நம் கலாச்சாரத்தைப் பேணிக் காக்கும் தமிழ்ப்பெண்களுக்கான அங்கீகாரம் அளிக்கும் மேடையாக வரவிருக்கிறது 'Fems' வழங்கும் நாடியின் 'தமிழச்சி - நம்பிக்கைக்கு மகுடம், இதயங்களின் சங்கமம்

தமிழச்சி என்பது இலங்கையில் வாழும் 20 முதல் 28 வயது வரையிலான தமிழ் பெண்களுக்கான ஒரு தனித்துவமான "அழகுப் போட்டி" ஆனால் இது வெறும் அழகுப் போட்டி மட்டும் அல்ல- இளம் தமிழ் பெண்களின் தன்னம்பிக்கை, தனித்தன்மை , திறமைகள் மற்றும் ஆளுமையை வெளிப்படுத்தும் மேடையாகவும் அமைகிறது.

"நாடி" இலங்கையின் டிஜிட்டல் வெளியில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்த ஒரு தளம். வாழ்வியல் சார்ந்த விடயங்களை மக்களுக்கு எளிதில் விளங்கும் வகையில் கண்கவர் தோற்றத்தில் அன்றாடம் சமூக ஊடகங்கள் வழியே அளித்து வருகிறது. Facebook, Instagram,YouTube மற்றும் TikTok ஆகிய சமூக ஊடகங்களில் தனக்கென ஒரு நேயர் தளத்தை கடந்த ஐந்து ஆண்டுகளில் உருவாக்கியுள்ளது. முக்கியமாக இலங்கை வாழ் தமிழ் இளைஞர்களின் நாடித் துடிப்பை அறிந்து அதற்கேற்ற விடயங்களை அளிப்பதில் நாடி என்றுமே பின்நின்றதில்லை. நம்நாட்டின் திறமைசாலிகளை இனங்கண்டு அவர்களுக்கு பொதுவெளியில் ஒரு அங்கீகாரம் அளித்துவரும் பணியை நாடி தொடர்ந்தும் ஆற்றி வருகின்றது. இலங்கை மாத்திரமன்றி, இந்தியா, ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகளென தமிழ் மக்கள் வாழுமிடமெல்லாம் தனது பெயரை நிலைநிறுத்த அயராத உழைப்பை காட்டி வருகிறது.

ஆக, நம் நாட்டு தமிழ் பேசும் பெண்களுக்கான அங்கீகாரத்தை வழங்கும் பொருட்டு 'தமிழச்சி' என்ற போட்டியை நாடி குழுவினர் ஏற்பாடு செய்கின்றனர். இலங்கை பெண்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான 'Fems' இந்த போட்டிக்கு தலைமை அனுசரணையாளராக கைகோர்த்துள்ளது. அச்சு ஊடக அனுசரணையாளராக 'வலம்புரி' இணைந்துள்ளது.

போட்டி விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் வருமாறு,

- குடியுரிமை - போட்டியாளர்கள் இலங்கை குடியுரிமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- வயது எல்லை- போட்டியாளர்கள் 20 முதல் 28 வயதுக்கு இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- உயர எல்லை - குறைந்தபட்சம் 5 அடி உயரம் கொண்டிருத்தல் வேண் டும்.
- திருமண நிலை - திருமணமாகாத பெண்கள் மட்டுமே போட்டிக்குத் தகுதியுடையவர்கள், விவாகரத்து பெற்ற பெண்கள் போட்டிக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- பாலினம்- பெண் போட்டியாளர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.
- மொழி புலமை - போட்டியாளர்களின் தாய்மொழி தமிழாக இருத்தல் வேண்டும். ஆங்கில புலமையைக் கொண்டிருத்தல் சிறப்பு தேர்ச்சியாக கருதப்படும்.
- கல்வித் தகுதி - போட்டியாளர்கள் A/L பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் கட்டாயம். தற்போது உயர் கல்வி பயின்று கொண்டிருத்தல் அல்லது பட்டதாரி அல்லது அதற்கு மேற்பட்ட தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- தேர்வு நிலை - போட்டியாளர்கள் யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி அல்லது கொழும்பில் நடைபெறும் ஆரம்பத் தேர்வு போட்டிகளில் யாதேனும் ஒன்றில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.
- நடத்தை முறை - போட்டியாளர்கள் போட்டியின் விதிகளை கடைபிடிக்க வேண்டும் மற்றும் நிகழ்வு முழுவதும் professionalism நடத்தையை பேண வேண்டும்.
- அர்ப்பணிப்பு - போட்டியாளர்கள் அனைத்து பயிற்சி, ஒத்திகைகள் மற்றும் போட்டி சுற்றுகளிலும் பங்குப்பற்ற வேண்டும்.
- தகுதி நீக்க விதி - தவறான தகவல்களை வழங்கும் அல்லது போட்டி விதிகளை மீறும் எந்தவொரு போட்டியாளரையும் தகுதி நீக்கம் செய்யும் உரிமை ஏற்பாட்டுக் குழுவிற்கு உண்டு.
- ஆடை ஒழுங்கு - போட்டி ஏற்பாட்டாளர்களால் நிர்ணயிக்கப்பட்ட ஆடை, ஒப்பனை வழிகாட்டல்களையே பின்பற்ற வேண்டும்.

இப்போட்டியில் பங்கேற்க இன்றே thamizhachi.nadi.lk அல்லது 070 70 78 573 வழியாக விண்ணப்பியுங்கள். விண்ணப்பிக்காதவர்கள் நேரடியாக தெரிவுச் சுற்று நடைபெறும் இடத்திற்கு வருகை தந்து போட்டியில் பங்கேற்கலாம்.

இந்த போட்டியின் முதல் தெரிவுச் சுற்று நாட்டின் நான்கு முக்கிய நகரங்களில் நடைபெற காத்திருக்கின்றது. அந்தவகையில் செப்டெம்பர் 14ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வலம்புரி ஹோட்டலில் முதல் தெரிவு நிலை போட்டிகள் நடைபெறும். தொடர்ந்து செப்டெம்பர் 23ம் திகதி திருகோணமலை Green Garden ஹோட்டலில் நடைபெறும். பின்னர் மத்திய மாகாணத்தில் வாழும் மங்கையர்களுக்காக கண்டி நகரில் அமைந்துள்ள Radisson ஹோட்டலில் செப்டெம்பர் 27 ஆம் திகதியும் இறுதியாக செப்டெம்பர் 30 ஆம் திகதி கொழும்பு Pegasus Reef ஹோட்டல் ஆகிய இடங்களில் குறித்த போட்டிகள் நடைபெறும். இவை தெரிவுநிலை போட்டிகள் ஆதலால் யாதேனும் ஒரு போட்டியில் பங்கேற்றல் போதுமானது. ஆனால் போட்டியாளர்கள் கட்டாயம் மேற்கூறிய நகரங்களில் ஏதேனும் ஒன்றில் கட்டாயம் பங்குபற்றியிருக்க வேண்டும். அவ்வாறு பங்கேற்போரில் இறுதிச்சுற்றுக்கு முதல் 12 பேர் ஒக்டோபர் முதலாம் திகதி தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு பிரத்தியேக பயிற்சி பட்டறைகள் இலங்கையின் தலைசிறந்த வல்லுனர்களால் வழங்கப்பட்டு இறுதிப் போட்டிக்கு தயார் செய்யப்படுவர். நவம்பர் 20 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் மாபெரும் இறுதிப் போட்டியில் முதல் 3 பேர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு பாரிய பணப் பரிசும் கிடைக்கப்பெறும்.

நம் நாட்டு பெண்களுக்கான அங்கீகாரத்தை அறம் தவறாது அளிப்பதில் ஏற்பாட்டு குழுவினர் கண்ணும் கருத்துமாக இருந்து பணியாற்றி வருகின்றனர். நாட்டின் முக்கிய ஊடகங்களில் ஒன்றாதலால் பங்கேற்பாளர்களின் கண்ணியத்திற்கு பங்கம் விளைவிக்காத வகையில் போட்டிகளை கவனமாக வடிவமைத்திருக்கின்றனர். இது நம் நாட்டு மங்கையருக்கான அரிய வாய்ப்பு. தவற விடாதீர்கள்.

# 'தெவனி எச 2025' வர்த்தகக் கண்காட்சி

காட்சி ஊடகத்துறையில் ஈடுபட்டுள்ள தொழில் வல்லுனர்கள், பாவனையாளர்கள் மற்றும் தொழில் முனைவோருக்காக வருடாந்தம் நடத்தப்படும் "தெவனி எச 2025" வர்த்தகக் கண்காட்சியானது எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 14 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியிலிருந்து மாலை 7.00 மணிவரை கொழும்பு BMICH வளாகத்தில் நடைபெறும்.

புகைப்படம், வீடியோ, சைன், அச்சிடுதல், விளம்பரம் போன்ற 5 பிரிவுகளின் கீழ் நடத்தப்படும் இக் கண்காட்சியானது இத்துறையின் மிகப் பெரிய கண்காட்சியாகும்.

வர்த்தகத்தினை இற்றைப்படுத்தவும், இத்துறைக்குள் புதிய திட்டங்களை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும் தொழில் முனைவோருக்கும் "தெவனி எச 2025" கண்காட்சியானது வழிகாட்டியாக விளங்கும். அத்துடன் இத்துறையின் நவீன கருவிகள், உதிரிப்பாகங்கள் மற்றும் சேவைகளை இலங்கை வர்த்தகர்களுக்கு அறிமுகப்படுத்துதல்.

"தெவனி எச 2025" வர்த்தகக் கண்காட்சி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 077 306 3566 என்ற இலக்கத்தில் அனுபம சேனா தீரவைத் தொடர்பு கொள்ள முடியும்.

# இராசிபலன்

11.09.2025
ஆவணி 26 , வியாழக்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 4.27 மணி வரை

அச்சுவினி பிற்பகல் 6.14 மணிவரை
சுப நேரம் 7.33-9.03 மணிவரை
இராகுகாலம் 1.33-3.03 மணிவரை

அமிர்தசித்தம்
சந்திராஷ்டமம்
உத்தரம், அத்தம்,

வளவன்

**மேஷம்**
எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்,பணியில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம், கனவுப் பலிதமுண்டு.

**ரிஷபம்**
விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்**
இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.

**கடகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்**
ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கன்னி**
குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்**
சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்,குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்**
திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்ட படியே கைகூடும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் புகழ்கூடும், ஆரோக்கியமான நாள்.

**தனுசு**
கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், நெடுநாளைய கனவுகள் நனவாகலாம்.

**மகரம்**
பொது வாழ்வில் மதிப்பும் மரியதையும் உயரும் நாள், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கும்பம்**
நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**மீனம்**
சுபகாரிய பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம்.

தோல்விகள் மூலம் மேலும் புத்திசாலிகளாகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 863





இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அங்கிருந்த மூன்று பெண்களின் முகங்களும் பீதிகரமான மாறுதலை அடைந்ததை அநிருத்தர் கவனித்தார்.

உடனே அவர் தொடர்ந்து ஆறுதலாகக் கூறினார்: "ஆனால் அதை நான் நம்பவில்லை இவன் கூறுவது வெறும் வதந்திதான். புயலைக் காட்டிலும் வேகமாக வதந்தி பரவியிருக்கிறது. கடற்கரைப் பகுதியிலிருந்து செய்தி வருவதற்கே இன்னும் நேரமாகவில்லை. குதிரை மீது தூதர்கள் வந்தாலும் இன்று மத்தியானத்துக்கு மேலேதான் இங்கு வந்து சேர முடியும். இதற்கிடையில் நம்மால் செய்யக் கூடிய உதவிகளையெல்லாம் செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம்."

இளையபிராட்டி குந்தவை தன் மனக் குழப்பத்தைச் சிறிது சமாளித்துக் கொண்டு, "ஐயா! நாகைப்பட்டினம் பற்றிய வதந்தி என் காதிலும் விழுந்தது. அதைப் பற்றியும் தங்களிடம் பேசலாம் என்று வந்தேன். இப்போதுதானே சூடாமணி விஹாரத்திற்கு நாம் நிவந்தங்கள் அளித்துவிட்டு வந்தோம்? விஹாரத்துக்கு விபத்து நேர்ந்தால் பாவம், அதில் உள்ள பிக்குக்கள் என்ன செய்வார்கள்?" என்று கூறிவிட்டு, பூங்குழலி நின்ற இடத்தை நோக்கினாள்.

"ஐயா! இந்தப் பெண் இங்கே எப்படி வந்தாள்? கோடிக்கரைத் தியாவிடங்கரின் மகள் பூங்குழலி அல்லவா இவள்?" என்று வினவினாள்.

"ஆமாம் தியாகவிடங்கரின் குமாரிதான் ஆனால் அவரைப் போல் சாதுவல்ல. ரொம்பப் பொல்லாத பெண் தனக்குச் சம்பந்தமில்லாத காரியங்களில் தலையிட்டுத் தொந்தரவு விளைவிப்பவள்!" என்றார் முதன்மந்திரி.

இளையபிராட்டிக்கு வேறுவித ஐயப்பாடு தோன்றியது. அருள்மொழியைப் பற்றி உளவு அறிவதற்காகத்தான் பூங்குழலியை இங்கே அநிருத்தர் தருவித்திருக்கிறாரோ? தந்திர வித்தைகளில் கைதேர்ந்த மந்திரியாயிற்றே? எப்படி இருந்தாலும் பூங்குழலியின் சார்பில் தான் இருக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு, "அப்படியொன்றுமில்லையே? பூங்குழலி மிக நல்ல பெண் ஆயிற்றே! இங்கே வா, அம்மா! முதன் மந்திரி ஏன் உன் பேரில் கோபமாயிருக்கிறார்? அவருக்கு ஏதேனும் தொந்தரவு கொடுத்தாயா?" என்றாள்.

பூங்குழலி சற்று நெருங்கி வந்து, "தேவி! முதன்மந்திரியையே தாங்கள் கேளுங்கள்! நான் முதன்மந்திரிக்குத் தொந்தரவு கொடுத்தேனா அவர் எனக்குத் தொந்தரவு கொடுத்தாரா என்று கேளுங்கள்!" என்றாள்.

"ஓகோ! நீயும் கோபமாகத்தான் இருக்கிறாய்! இங்கே வா, பெண்ணே என் அருகில் உட்கார்ந்துகொள்!" என்று கூறி இளையபிராட்டி பூங்குழலியைத் தன் அருகில் உட்கார வைத்துக் கொண்டாள். "ஐயா! இந்தப் பெண்ணை எதற்காகத் தருவித்தீர்கள்? ஏதாவது முக்கியமான காரியமா?" என்று கேட்டாள்.

"அம்மணி! நான் இந்தப் பெண்ணைத் தருவிக்கவில்லை. இப்படி ஒரு பொல்லாத பெண் இருக்கிறாள் என்ற செய்தியே எனக்குத் தெரியாது இவளாகவே தான்.." என்று அநிருத்தர் தயங்கினார். "தேவி! முதன் மந்திரி ஏன் தயங்குகிறார்? மிச்சத்தையும் சொல்லச் சொல்லுங்கள்!" என்றாள் பூங்குழலி.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கல்விதான் நமக்குச் செல்வம்



(நேற்றைய தொடர்ச்சி)

மன்னன் ஒரு வீரனை அழைத்தான். வீரனிடம் இந்த ஓலையை கொடுத்து யாராவது இந்த ஓலையை படித்து மன்னனுக்கு விளக்குபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப் படும் என்று அறிவிக்கும்படி சொன்னான்.

வீரன் அதன்படி அரண்மனையை விட்டு வெளியே வந்து யாராவது ஓலையை படித்து மன்னனுக்கு விளக்கினால் பரிசுத் தொகை அளிக்கப்படும் என அறிவித்தான்.

மன்னனைப் பற்றி அனைவருக்கும் தெரியுமாதலால் யாரும் அந்த ஓலையைப்படித்து விளக்கம் அளிக்க முன்வரவில்லை. மன்னனுக்கு மிகுந்த அவமானமாயிற்று. ஒரு ஓலையை படிக்க நம் நாட்டில் யாருமில்லையா? முதன் முதலாக கல்வியின் அருமையை உணரத்தொடங்கினான். தன் தந்தையிடம் முன்னர் பணிபுரிந்த மந்திரியாரை அழைத்துவரச் சொன்னார். அவரும் மன்னரை காண அரண்மனைக்கு வந்தார்.

ஐயா நீங்களாவது இந்த ஓலையை படித்து எனக்கு விளக்கமளிக்கக் கூடாதா என்று கேட்டான் மந்திரியாரும் அந்த ஓலையை வாங்கிப்பார்த்தார்.

சிறிது நேரம் வாசித்து வாசித்து பார்த்தவர் திடீரென்று அகலமான ஒரு கண்ணாடியை கொண்டு வரச்சொன்னார். மன்னனும் எதுவும் புரியாமல் ஒரு கண்ணாடியை கொண்டு வரச் சொன்னான். கண்ணாடி வந்தவுடன் மந்திரியார் மன்னா இப்பொழுது கண்ணாடியில் உள்ளதை படியுங்கள் என்று ஓலையை கண்ணாடி முன்னால் காட்ட அதில் கல்வி அறிவைப்பற்றிய திருக்குறள்கள் வரிசையாக எழுதப்பட்டிருந்தன.

"உளர் என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக் களர்அனையர் கல்லா தவர் நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம் மண்மாண் புனைபாவை அற்று,

கல்லா ஒருவன் தகைமை தலைப் பெய்து சொல்லாடச் சோர்வு படும்

கல்லாதான் ஒட்பம் கழியனன்று ஆயினும் கொள்ளார் அறிவு உடையார்.

மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப் பிறந்தும் கற்றார் அனைத்துஇலர் பாடு.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனையவர்.

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன் சொல்லாது இருக்கப் பெறின்"

மன்னன் வெட்கத்துடன் மந்திரியாரே எனக்கு படிக்கத்தெரியவில்லை தயவு செய்து படித்து காட்டும் என்று கேட்டான் மந்திரியாரும் வாசித்து அவனுக்கு விளக்கம் சொன்னார்.

மன்னன் "என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் மந்திரியாரே, கல்வி என்பது ஒரு நாட்டின் செல்வம் என்பதை "ஒரு ஓலையை படிக்க இங்குள்ள அனைவருமே சிரமப்பட்ட பொழுதே புரிந்து கொண்டேன்". இனி இந்த நாடு முழுவதும் அனைவரும் கல்வி கற்க ஏற்பாடு செய்வேன். அது போல நானும் உங்களைப்போல உள்ள சான்றோரிடம் கல்வி கற்றுக்கொள்ளப்போகிறேன்.

(ஒரு நாட்டின் வளமைக்கும், வளர்ச்சிக்கும், கல்விதான் அடிப்படை இந்த கல்வி வளர்ச்சி பெற்றால்தான் ஒரு நாடு அனைத்து வளங்களும் பெற முடியும்.) (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களது ஒவ்வொரு செயல்களின் மூலம் மகிழ்ச்சியைப் பரப்புபவர்களே மேன்மையானவர்கள்

– அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## நல்லூர் பிரதேச சபையின் நன்முயற்சியைப் பாராட்டுவோம்

கட்டாக்காலி நாய்களின் தொல்லை என்பது சாதாரணமான விடயம் அல்ல. கட்டாக்காலி நாய்களின் கடிக்கு இலக்கானவர்கள், தெருநாய்கள் குறுக்கே பாய்ந்ததால் விபத்துக்கு ஆளாகி உயிரிழந்தவர்கள் மற்றும் படுகாயமடைந்தவர்கள் எனத் தெருநாய்த் தொல்லை சொல்லிமாளா.

பொதுவில் தெரு நாய்க்கடிக்கு ஆளாகின்றவர்களுக்கு ஏற்றப்படுகின்ற மருந்துகளுக்கான செலவு மற்றும் தெருநாய்களால் நிகழ்ந்த விபத்தில் படுகாயமடைந்தவர்களுக்கான சிகிச்சை எனத் தனித்து நோக்கும்போது, கோடிக்கணக்கான பணம் செலவாகுவதைக் கண்டுகொள்ள முடியும்.

இதையும் கடந்து, ஒரு நாகரிகமான மக்கள் சமூகம் என்பதை இல்லாது செய்வதில் தெரு நாய்களின் வகிபங்கு உச்சமாக உள்ளது.

உண்மை. வீதிகளில் குப்பைகளைக் கொட்டுகின்ற ஒரு மக்கள் சமூகம் – அந்தக் குப்பைகளை இழுத்து எறிந்து குறித்த வீதி முழுவதும் கழிவுகளைப் பரப்பி அந்த இடம் முழுவதையும் அசுத்தப்படுத்துகின்ற தெரு நாய்க் கூட்டம் என எங்கள் வாழ்விடம் மிக மோசமாகின்றன.

இவ்வாறு தெருநாய்த் தொல்லை ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்று ஆராயும் போது, பெண் நாய்களை வளர்ப்பவர்கள் அந்த நாய்கள் ஈன்ற குட்டிகளைத் தெருவிலும் சந்தைகளிலும் அநாதரவாக விட்டு விடுகின்றனர்.

அதேபோல தெருநாய்களும் இனப்பெருக்கத்தைச் செய்ய, தெரு நாய்களின் பெருக்கம் பன்மடங்காகிறது.

தெருநாய்களைக் கட்டுப்படுத்துவதற்கு என காப்பகங்கள் உருவாக்கப்பட்டாலும் சமூக ஒத்துழைப்பு இன்மையால் அவற்றை இயக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

இருந்தும் காப்பகங்கள் மூலம் தெருநாய்களைக் கட்டுப்படுத்த முடியும் என்ற எண்ணக்கரு நம் மத்தியில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நல்லூர் பிரதேச சபை தெருக்களில் அலைகின்ற பெண் நாய்களுக்குக் கருத்தடை செய்கின்ற திட்டத்தை வகுத்து, தெருவில் உள்ள பெண் நாய்களைப் பிடித்துத் தருகின்றவர்களுக்கு அறுநூறு ரூபா (ஒரு பெண் நாய்க்கு) சன்மானம் வழங்கப்படும் என அறிவித்துள்ளது.

உண்மையில் நல்லூர்ப் பிரதேச சபையின் இந்த முயற்சி பாராட்டப்பட வேண்டும்.

அதேநேரம் கருத்தடை செய்யப்படுகின்ற பெண் நாய்களைக் காப்பகங்களில் விட்டு அவற்றை பராமரிக்கும்போது தெரு நாய்த் தொல்லை கணிசமாக வீழ்ச்சியடையும்.

எனவே பிடிக்கப்பட்டு, கருத்தடை செய்யப்பட்ட நாய்களை மீளவும் தெருவில் விடாமல், அவற்றின் இறுதி ஆயுட்காலம் வரை அவற்றைக் காப்பகங்களில் வைத்துப் பராமரிக்கும்போது; நாய்ப் பெருக்கமும் தெரு நாய்களின் தொல்லையும் குறைக்கப்படுவதுடன் ஜீவகாருண்யமும் மேலோங்கும் என்பதால், இது குறித்தும் நல்லூர்ப் பிரதேச சபை சிந்தித்து ஏனைய சபைகளுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

# இலங்கையில் மனிதஉரிமைகள் தொடர்பில் கவலை எழுப்ப எந்தக் காரணமும் இல்லை

## ஜெனிவாவில் ரஷ்யா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை குறித்து கவலைகளை எழுப்ப எந்தக் காரணமும் இல்லை என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

இலங்கை குறித்த ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் அறிக்கைக்குப் பதிலளிக்கும் விதமாக ரஷ்யா இந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் இலங்கைக்கு அண்மையில் வந்து சென்றமை இதற்கான தெளிவான உதாரணம் என்றும் ரஷ்யா குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் கடமைகளுக்கு ஏற்ப இலங்கையின் தேசிய சட்டம் மாற்றியமைக்கப்படும் முயற்சிகளை ரஷ்யா அவதானித்து வருகிறது.

பொது நிர்வாக அமைப்பை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தேசிய நல்லிணக்கத்தை நோக்கி முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது.

இந்தச் சூழலில் இந்தப் பகுதியில் ஒரு புதிய தேசியக் கொள்கை மற்றும் செயற்றிட்டத்தை உருவாக்கத் தொடங்க ஓகஸ்ட் 2025 இல் நாட்டின் அரசாங்கம் எடுத்த முடிவை தமது நாடு வரவேற்பதாக ரஷ்யா குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் சிறப்புப் பணியகங்கள் செயற்படுகின்றன. அதே போல் மனித உரிமைகள் மீறல்கள் குறித்த ஜனாதிபதி விசாரணை ஆணையகமும் செயற்படுகின்றது.

இந்தப் பின்னணியில் முன்னர் இடம்பெற்ற மனித உரிமைகள் சாக்குப்போக்குகளின் கீழ் தற்போதைய இறையாண்மை கொண்ட அரசின் மீது அரசியல் அழுத்தத்தைச் செலுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகள் கவலைக்குரியவை என்று ரஷ்யாவுக்கான மனித உரிமைகள் பேரவையின் பிரதிநிதி குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சூழலில்தான் இலங்கை அதிகாரிகளால் ஆதரிக்கப்படாத மனித உரிமை மீறல்கள் குறித்த தகவல்களைச் சேகரித்துப் பகுப்பாய்வு செய்ய ஐக்கிய நாடுகள் பேரவைக்கு அதிகாரம் அளிக்கும் தீர்மானம் உலகளாவிய கொள்கைகளுக்கு முரணானது என்று ரஷ்யப் பிரதிநிதி தெரிவித்துள்ளார். (ம-7)

## சபுகஸ்கந்தவில் தீ விபத்து

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்குச் சொந்தமான எண்ணெய்த் தொட்டியில் நேற்றுப் புதன்கிழமை (10) மதியம் தீ விபத்து ஏற்பட்டது.

எரிபொருள் காலியாக இருந்த எண்ணெய்த் தொட்டியில் பழுதுபார்க்கும் பணியின் போது தீ விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீயைக் கட்டுப்படுத்த கொலன்னாவை மற்றும் கொழும்பில் இருந்து தீயணைப்பு வாகனங்கள் கொண்டு வரப்பட்டு தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (ம-7)

## வேலணையில் வாள்வெட்டு பிரதான சந்தேக நபர் கைது

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வேலணைப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் தேடப்பட்டு வந்த நிலையில் பிரதான சந்தேக நபர் 10 நாட்களின் பின்னர் நேற்று முன்தினம் (09) கைது செய்துள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 31 ஆம் திகதியன்று வேலணை அராலி சந்திக்கு அண்மையில் காரில் சென்ற ஒருவரை பட்டா ரகவாகனத்தில் சென்ற குழுவொன்று வழிமறித்து வாளால் வெட்டிக் கடுங் காயங்களுக்குள்ளாக்கிவிட்டுத் தப்பிச் சென்றிருந்தது.

கடும் காயமுற்ற நபர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் குறித்த வாள்வெட்டுடன் தொடர்புடைய குழுவைத் தேடிப் பொலிஸார் தீவிர நடவடிக்கையில் இறங்கியிருந்தனர்.

இந்நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் ஊர்காவற்றுறை பொலிஸ் அதிகாரியான கொன்சாபத்து ஹரிதாஸ் தலைமையிலான அணியினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேநேரம் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய நபர்களும் விரைவில் கைது செய்யப்படுவர் எனத் தெரிவித்த ஊர்காவற்றுறை பொலிஸார் கைதான பிரதான நபரை விசாரணைகளின் பின்னர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவர் என்றும் தெரிவித்தனர். (ம-7,104)

## முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்தவுக்கு மீண்டும் மறியல்

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொல்கஹவெல நீதவான் நீதிமன்றத்தில் அவரை நேற்று முற்படுத்திய போது செப்ரெம்பர் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது.

கடற்படைப் புலனாய்வுப் பணியகத்தில் பணியாற்றிய போது, பொத்துஹெரவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காணாமல் போனது தொடர்பாக அவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கோவில் வீதியில் பயணிக்க தற்காலிகமாக வீதித் தடை

(யாழ்ப்பாணம்)

நல்லூரான் அலங்கார வளைவு அமைக்கப்படவுள்ளதால் கோவில் வீதியில் தற்காலிகமாக வீதித்தடை ஏற்படுத்தப்படவுள்ளதாக யாழ்.மாநகரசபை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ். மாநகரசபை வெளியிட்ட அறிவிப்பில்,

கோவில் வீதியில் சங்கிலியன் வீதிக்கு அண்மையாக நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டுக்கூடல் அமைப்பால் நல்லூரான் அலங்கார வளைவு அமைக்கப்படவுள்ளதால் குறித்த கட்டுமான வேலையின் பொருட்டு 18.09.2025 ஆம் திகதி முதல் 28.09.2025 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் கோவில் வீதியினைப் பயன்படுத்துவோர் குறித்த பகுதியூடாகப் பயணிப்பதிலுள்ள அசௌகரியங்களை சீர் செய்வதன் பொருட்டு பருத்தித்துறை வீதி - கோவில் வீதிச் சந்தியிலும், கோவில் வீதி - சங்கிலியன் வீதிச் சந்திக்கு அருகிலும் தற்காலிகமாக வீதியினை மூடவுள்ளதால் இக்காலத்தில் இவ்வீதியினைப் பயன்படுத்துவோர் போக்குவரத்தினை சிரமமின்றி மேற்கொள்ள மாற்றுப் பாதையாகக் கீழுள்ள மாற்று ஒழுங்கினை பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

1. நல்லூர் மேற்கு வீதி வழியாக கோவில் வீதியைப் பயன்படுத்துவோர் நல்லூர் சிவன் கோவிலடியால் பாரதியார் சிலை சந்தியருகிலுள்ள புதிய திருநெல்வேலி வீதியூடாக (புது சிவன் வீதி) திருநெல்வேலி வீதியை அடைந்து (சிவன் வீதி) முடமாவடிச் சந்தியை அடைந்து கோவில் வீதியைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

2.முடமாவடிச் சந்தியூடாக கோவில் வீதியைப் பயன்படுத்தி நல்லூர் கோவிலை அடைவதற்கு சங்கிலியன் வீதி ஊடாகப் பருத்தித்துறை வீதியைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேரழிவுகளும் நில நடுக்கமும் குறித்த ஒரு பார்வை

02

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

சிலர் விண்கல் மோதலால் கூட இந்த அழிவு நிகழ்ந்துள்ளது எனக்கருதுகின்றனர்.

### ட்ரையாசிக் - யுராசிக் உயிரினப்பேரழிவு

ட்ரையாசிக் காலப் பகுதியின் கடைசி 18 மில்லியன் ஆண்டுகளில், இரண்டு அல்லது மூன்று கட்டமாக இந்த அழிவு இடம்பெற்றது. பல்வேறு விதமான உயிரினங்கள் அழிவைச் சந்தித்தது. நீர்வாழ் ஊர்வன, சில பெரிய நீர்நில வாழ்வன, மற்றும் பவளத்திட்டுக்களில் உருவாகும் உயிரினங்கள் என்பன இவற்றுள் அடங்கும். இருந்தும், பெரும்பாலான தாவர வகைகள் இந்த அழிவில் இருந்து தப்பின.


கிட்டத்தட்ட பூமியில் வாழ்ந்தவற்றில் 50 வீதமான உயிரினங்கள் அழிவடைந்தன. காலநிலை மாற்றம், பெரும் எரிமலை வெடிப்பு, மற்றும் விண்கல் தாக்கம் போன்றவை காரணமாக கருதப்படுகின்றது.

### கிரீடாசியஸ் - மூன்றாம் உயிரினப்பேரழிவு

இது நாம் ஏற்கனவே கேள்விப்பட்ட உயிரினப் பேரழிவு. டைனோசர்களின் அழிவுக்கு காரணமாக இருந்த இந்த நிகழ்வு, ஒரு விண்கல் பூமியில் மோதியதால் ஏற்பட்டது. இந்த நிகழ்வை முடித்து வைத்த பெருமை இந்த விண்கல்லுக்கு இருந்தாலும், அதற்கு முன்னமே பல மில்லியன் வருடங்களாக, இருந்த உயிரினங்கள் அழியத் தொடங்கி இருந்தது.

சில கடல்வாழ் உயிரினங்கள், பெருமளவு பூமரங்கள், மற்றும் டைனோசர்கள் அழிவடையத்தொடங்கியிருந்த காலம், இதற்கு மிகப்பெரிய எரிமலை வெடிப்பினால் ஏற்பட்ட காலநிலை மாற்றம் காரணமாக இருக்கலாம்.

இறுதியாக மெக்சிகோவின் யுக்கட்டான் குடாப்பகுதியில் விழுந்த 10 கிலோமீற்றர் விட்டமான விண்கல் ஏற்படுத்திய சுனாமி



மற்றும் பூமியை முழுதாக மூடக்கூடியளவு தூசு போன்றவை இந்தப் பேரழிவின் பெட்டியில் கடைசியாக ஒப்பமிட்டு இந்தப் பேரழிவை உறுதிப்படுத்தியது.

ஆக கடைசியாக இவ்வாறான ஒரு பேரழிவு நடந்து 65 மில்லியன் வருடங்கள் ஆயிற்று. பூமியின் வரலாற்றில் பல மில்லியன் கால இடைவெளியில் இவ்வாறான நிகழ்வுகள் நடப்பதற்கான சாத்தியக்கூறுகள் மிக அதிகம்.

ஆனால், அது எப்போது, எந்த வடிவில், எத்தனை ஆண்டுகள் கழித்து நடைபெறும் என கணிக்க முடியாது. ஒருவேளை ஆறாவது பேரழிவு என்று ஒன்று நடந்தால், அதற்கு மனிதர்கள்தான் காரணமாக இருப்பார்கள் என பல வல்லுநர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். நாம் சிறுகச் சிறுக நம்முடைய தேவைக்காக இயற்கை வளங்களை அழிப்பதே ஆறாவது பேரழிவுக்குக் காரணமாக அமையலாம்.

### இனிவரும் பேரழிவுக்கு முதற் பாதிப்பு

முதற் காரணம் தென் துருவத்தில் இருக்கும் பனிக்கட்டிகள் உருகுவது ஆகும். புவி தொடர்ந்து வெப்பமயமாகி வரும் நிலையில், பனிக்கட்டிகள் உருகுவதும் அதிகரித்துள்ளது. இது கடல் மட்டத்தை உயர்த்தும் அபாயம் இருக்கிறது. இதே வெப்பத்தில் பனிக்கட்டிகள் உருகி வந்தால் 2100 ஆம் ஆண்டில் கடல் மட்டம் 2 மீற்றர் வரை அதிகரித்துவிடும். இதனால் உலகின் பல முக்கிய நகரங்கள் கடலில் மூழ்கும் அபாயம் இருக்கிறது. இது சுமார் 50 கோடி பேரை ஆபத்தில் தள்ளும்

### இரண்டாவது பாதிப்பு

அடுத்து பவளப்பாறைகள் அழிப்பது. இதுவும் புவி வெப்பமயமாதல் காரணமாகவே நடக்கிறது. பவளப்பாறைகள் அழிவது என்பது அதை மட்டும் நாம் இழக்கிறோம் என்று பொருள் இல்லை. இதனால் [illegible] மொத்தமாகச் சீர்குலைகிறது. இதனால் கடலில் இருக்கும் மீன்கள் அழியும் அபாயம் இருக்கிறது.

### மூன்றாவது பாதிப்பு

பூமியில் பல இடங்களில் பெர்மாஃப்ரோஸ்ட் (permafrost) இருக்கிறது. இந்த பெர்மாஃப்ரோஸ்ட் என்பது மண் அல்லது நீருக்கு அடியில் உள்ள வண்டல் மண் ஆகும். இவை தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கும் மேலாகப் பூஜ்ஜிய டிகிரிக்கு கீழே இருக்கும். இவை புவி வெப்ப மயமாதல் காரணமாக உருகும் நிலையில் இருந்து வெளியே வரும். இது பைங்குடில் வாயுக்கள் (green house gases) வெளியேற்றும். இதனால் பருவநிலை மாற்றம் மட்டுமின்றி, புது நோய்ப் பாதிப்புகளும் பரவும் அபாயம் இருக்கிறது.

### நான்காவது பாதிப்பு

அடுத்து பெருங்கடல் நீரோட்டம் சீர்குலைவது. பூமி சூடாவதால் வடக்கு அட்லாண்டிக் பகுதியில் வழக்கமான நீரோட்டம் பாதிக்கப்படும் நிலையில், அது ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில் கடும் குளிர் உட்பட மிக மோசமான வானிலையை ஏற்படுத்தும்.

### ஐந்தாவது பாதிப்பு

AMOC- The Atlantic meridional overturning circulation. இது அட்லாண்டிக் பெருங்கடலில் இருக்கும் நீரோட்டத்தைக் குறிக்கிறது. அதாவது இது பூமியின் கடல் சுழற்சி அமைப்பின் ஒரு அங்கமாகும். மற்றும் காலநிலை அமைப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனால் புவி வெப்பமயமாகும் நிலையில், உலகளவில் வறட்சி மற்றும் வெள்ளம் அடிக்கடி ஏற்படும் அபாயத்தை இது ஏற்படுத்துகிறது. மனித குலமே அழியும்.

இந்த 5 விஷயங்களில் ஏதாவது ஒன்று நமது கையை மீறிச் சென்றாலும் கூட இது பல மோசமான பாதிப்புகளை உருவாக்கும். இவை அனைத்தும் மீண்டும் சரி செய்யவே முடியாத பாதிப்புகள் என்பதால் இது மனித குலத்தையே அழிவின் பாதைக்கு இட்டுச் செல்லும் அபாயம் இருப்பதாகவும் ஆய்வாளர்கள் எச்சரிக்கிறார்கள்.

### நில நடுக்கம் அல்லது பூகம்பம் பற்றி...

பொதுவாக நம் அனைவருக்கும் நில நடுக்கம் எவ்வாறு ஏற்படுகின்றது? அதற்கு காரணம் என்ன அதன் விளைவுகள் என்? என்பதை பற்றியெல்லாம் சரியான புரிந்துணர்வு இருக்காது. அதனால் இங்கு நிலநடுக்கம் பற்றிய தகவல்களை விரிவாக காணலாம்.

சமீபத்தில இந்தியா, மியான்மர், ஜப்பான், ரஷ்யா மற்றும் பிற ஆசிய நாடுகள் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வலிகாமம்...

அவர் மேலும் உரையாற்றியதாவது,

யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ்வரும் 13 கிராம அலுவலர் பிரிவுகளில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மக்கள், பலாலி இராணுவ முகாம் இராணுவத்தினரின் வருகை மற்றும் எறிகணைத் தாக்குதல்கள் காரணமாக 1990.06.15ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமது சொந்த மண்ணிலிருந்து இடம்பெயர்ந்தார்கள்.

இந்த இடப்பெயர்வு நிகழ்ந்து 35 வருடங்கள் கடந்தும், நாட்டில் போர் முடிவடைந்து 16 வருடங்கள் நிரம்பிய பின்னரும் இன்றுவரை மீள்குடியேற்றப்படாத நிலையில் உள்ள அந்த மக்கள், இந்த நாட்டுக்குள்ளேயே இடைத்தங்கல் முகாம்களிலும், உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் சொல்லொணாத் துன்பங்களுக்கு மத்தியில் ஏதிலிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

கிட்டத்தட்ட 2700 ஏக்கருக்கும் அதிக விஸ்தீரணமுடைய காணிகளைக் கொண்ட மயிலிட்டி, பலாலி, வசாவிளான், கட்டுவன், குரும்பசிட்டி, குப்பிளான், தையிட்டி, ஊறணி, தோலகட்டி உள்ளிட்ட பல ஊர்களைச் சேர்ந்த மக்கள் தமது சொந்தக் காணிகளில் குடியேறும் உரிமை பறிக்கப்பட்டவர்களாகவே இன்றும் வாழ்கிறார்கள். ஆட்சி மாற்றங்கள், அரசு மாற்றங்களின் பின்னும் அவர்களது மீள்குடியேற்றம் சாத்தியப்படுத்தப்படாமை பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தினரதும் அவர்களது பிள்ளைகளினதும் அடுத்த தலைமுறையினதும் எதிர்காலத்தையே கேள்விக்குட்படுத்தியிருக்கிறது.

எனவே யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள 13 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்தும் கடந்த 35 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்து, இன்றுவரை சொந்த மண்ணில் மீள்குடியேற முடியாது இந்த நாட்டுக்குள்ளேயே ஏதிலிகளாக வாழ்ந்து வரும் குடும்பங்கள் எத்தனை என்பதை அமைச்சர் அறிவாரா?

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில், இந்த மக்களுக்குச் சொந்தமான எத்தனை ஏக்கர் காணிகள் இன்றளவும் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் குறித்த காணிகள் ஏன் இதுவரை விடுவிக்கப்படவில்லை என்பதையும் அமைச்சர் இச்சபைக்கு அறிவிப்பாரா? இந்த நாட்டில் போர் முடிவுற்று 16 ஆண்டுகளின் பின்னரும் வலிகாமம் வடக்கு பிரதேச மக்களின் மீள்குடியேற்றம் வலிந்து தவிர்க்கப்பட்டு வருவது ஏன்? என்பதையும் இதனால் சொந்த மண்ணில் குடியேறி வாழ முடியாதவர்களாக அந்த மக்கள் படும் அவலங்கள் எத்தகையவை என்பதையும் அமைச்சரால் இச்சபைக்கு அறிவிக்க முடியுமா?

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒருவருட காலத்தை அண்மித்துள்ள நிலையில், வலிகாமம் வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் சார்ந்து இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் இச்சபைக்கு அறிவிப்பாரா? இது விடயமாக, தங்கள் அமைச்சினால் ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின், வலிகாமம் வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் எப்போது சாத்தியமாகும் என்பதை இச்சபையில் பகிரங்கமாக தெரிவிக்க முடியுமா? அத்தகைய நடவடிக்கைகள் எவையேனும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனின் மேற்குறித்த மீள்குடியேற்ற விடயம் காலதாமதமாவதற்கான காரணம் என்ன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா? எனக் கேள்விகளை எழுப்பினார். (ம-7)

## இலங்கையில்...

தொடர்பாக சீனாவின் பிரதிநிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், "இலங்கை மக்கள் தேர்ந்தெடுத்த மனித உரிமைகள் மேம்பாட்டுப் பாதையை மதிக்க வேண்டும்.

இலங்கை விவகாரங்களில் வெளிநாடுகள் அரசியல் அழுத்தம் கொடுப்பது மற்றும் தலையிடுவதை சீனா எதிர்ப்பதாகவும் இது பிரிவினையை உருவாக்குவதோடு, இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளைப் பாதிக்கும் என்றும் தெரிவித்தார்.

ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள், "தூய இலங்கைத் திட்டம்", சுதந்திரமான அரச சட்டவாளர் அலுவலகம் நிறுவுதல் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் போன்ற முக்கிய வழக்கு விசாரணைகளில் பொறுப்புக்கூறலை உறுதி செய்யும் இலங்கையின் சமீபத்திய முயற்சிகளை சீனா பாராட்டியுள்ளது.

மனித உரிமைகள் பிரச்சினைகளை அரசியல் மயமாக்குவதையும் ஒரு கருவியாகப் பயன்படுத்துவதையும் சீனா தொடர்ந்து எதிர்ப்பதாகத் தெரிவித்தார்.

மேலும் அரசியல் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கும் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும் நிலையான முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கும் இலங்கை எடுக்கும் முயற்சிகளுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக சீனா உறுதியளித்தது. இந்த முயற்சிகள் இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு மிகவும் முக்கியம் என்று சீனப் பிரதிநிதி தெரிவித்தார். (ம-7)

## பயங்...

பேசிய ஐரோப்பிய ஒன்றியக் குழுவின் பிரதிநிதி, இலங்கையில் நிலைமாறுகால நீதிக்கான அதிகரித்து வரும் தேவையை நினைவுகூர்ந்துள்ளார்.

சுயாதீனமான பொதுவழக்கு விசாரணை அலுவலகத்தை நிறுவுவதற்கான முன்முயற்சி உட்பட அரசாங்கத்தின் முயற்சிகளை தாம் ஏற்பதாக ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொறுப்புக்கூறல் மற்றும் நீதி வழங்குவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லாதது குறித்து தொடர்ந்து கவலை கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இறந்த மற்றும் இன்னும் காணாமல் போனவர்களின் பல வழக்குகள் தொடர்பாக இந்த நிலைமையை அவசரமாகவும் தீர்க்கமான அர்ப்பணிப்புடனும் கவனிக்க வேண்டும்.

இந்தநிலையில் சட்டத்தின் ஆட்சிக்கும் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கான உத்தரவாதங்களுக்கும் பொறுப்புக்கூறல் மையமாகும் என்று ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

அதேநேரம் மாற்றத்தை ஏற்படுத்தும் சீர்திருத்தங்களைச் செயற்படுத்துவதிலும் மனித உரிமைகளின் பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும் இலங்கையை ஆதரிக்கத் தயாராக இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.09.10
சீட்டிழுப்பு இலக்கம் 5948
D 3 1 5 9 9 0
அத சம்பத
D 5 9 9 0
சீட்டிழுப்பு இலக்கம் 0523
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.09.10
சீட்டிழுப்பு இலக்கம் 0084
மகரம் 13 27 36 46

தன நிதானய
திகதி - 2025.09.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1978
U 01 07 10 27 U
Double Chance

மெகா பவர்
திகதி 10/09/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2296
O 08 02 04 43 74

ஜய
திகதி 2025.09.10
சீட்டிழுப்பு இலக்கம் 0216
H 1 4 0 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4190
சீட்டிழுப்பு திகதி 10.09.2025
G 24 34 46 69
G

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.09.10
சீட்டிழுப்பு இலக்கம் 1257
தனுசு 20 34 47 55 தனுசு

உத்தியோகபூர்வ முடிவுகள்
10.09.2025 வெற்றி வாரம் 0656
A 4 5 2 5 3 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23.927.177.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2922
சீட்டிழுப்பு திகதி 2025.09.10 தினம் புதன்கிழமை
09 35 45 59 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,626,643.20

சனிதா
திகதி 10.09.2025 வெற்றி வாரம் 5083
11 14 22 42 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,124,280.00

ஜயோதா
திகதி 2025.09.10 வெற்றி வாரம் 2160
27 58 59 68 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,580,844.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4634
சீட்டிழுப்பு திகதி 10.09.2025 தினம் புதன்கிழமை
14 26 27 28 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,441,082.00

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 06 16 37 70 71
2098
10.09.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.593,105,100.60

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2748
சீட்டிழுப்பு திகதி : 2025.09.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.91.193,338.40
40 50 53 71 B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருக்கள்மடம்...

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில்,

குருக்கள்மடம் சம்பவம் தொடர்பில் அரசாங்கம் முழுமையான கவனத்தைச் செலுத்தியுள்ளது. இதுதொடர்பான வழங்கு 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

அந்தக் காலப்பகுதியில் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் இருக்கவில்லை. என்றாலும் இந்த விடயத்தை மீண்டும் வெளியில் கொண்டு வந்தமைக்கு நன்றி தெரிவிக்கிறேன். அந்த வகையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

சர்வதேச மரபுரிமைக்கமைய இந்த அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெறும். தேவைப்பட்டால் சர்வதேசத்தின் உதவிகளையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

நீதி அமைச்சிடம் போதிய நிதி உள்ளதால் அது தொடர்பான நடவடிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட நிபுணர்களின் மதிப்பீட்டுக்கு இணங்க நிதியை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டில் நடைமுறையிலுள்ள சட்ட நடைமுறைகளுக்கு இணங்க வெளிப்படைத்தன்மையுடன் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதற்கான நடவடிக்கைகளில் இழப்பீட்டு அலுவலகம் மற்றும் காணாமற் போனோர் அலுவலகம் காத்திரமான செயற்பாடுகளை மேற்கொள்ளும். அதற்காக தேவைப்படும் அனைத்தையும் பெற்றுக் கொடுப்பதில் அரசாங்கம் ஒரு போதும் பின்னிற்காது என்றார். (ம-7)


## மணப்பெண் தேவை

01.Jaffna town, இந்து, 1996, சதயம், Msc, Software Engineering, Newzeland citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (50423)

02.நயினாதீவு - மல்லாகம் இந்து, 1991, Graduate, சதயம், Newzland citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (28920)

03.புலோலி - கந்தரோடை, இந்து, 1987, பூராடம், Msc, site engineer, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

04.நயினாதீவு- வேலணை, இந்து, 1995, பூரட்டாதி, PHD, USA மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

05.கொக்குவில், இந்து, 1990, கேட்டை, PHD, கனடா citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (46762)

06.இணுவில் - உரும்பிராய், இந்து, 1989, பூசம், Masters in Accountancy, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (45173)

07.காரைநகர், இந்து, 1979, உத்தரம், Engineer, UK citizen - Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (44877)

08.மாதகல், இந்து, 1993, விசாகம், A/L, Marketing Manager, USA citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (44324)

09.புங்குடுதீவு, இந்து, 1989, அத்தம், IT Engineer, Germany citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (44263)

10.இடைக்காடு - காரைநகர், இந்து, 1992, சித்திரை, MBBS, Doctor, Australia citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (44087)

நீங்களாகவே எமது website www.thaalee.comஇல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (C-3850)

S.Sharma J.P www.thaalee.com | 077 539 3728


## யாழில் ஹெரோயினுடன் நான்கு இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் ஹெரோயினுடன் நான்கு இளைஞர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

16, 18, 20 மற்றும் 22 வயதுடைய நால்வர் 170 மில்லிகிராம் ஹெரோயினுடன் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர். (ம-7,104)

## மனித உரிமை...

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60வது கூட்டத்தொடரில் தற்போது கலந்து கொண்ட அமைச்சர் விஜித ஹேரத் நேற்று (10) உயர்ஸ்தானிகர் டேர்க்கை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது உயர் ஸ்தானிகர் வோல்கர் டேர்க் கூட்டத் தொடரில் சமர்ப்பித்த அறிக்கை குறித்து ஆழமான விவாதம் நடத்தப்பட்டதாக வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் இலங்கையின் நிலைப்பாடு குறித்து அமைச்சர், இதன்போது விரிவான விளக்கத்தை வழங்கியுள்ளார்.

இலங்கையில் புதிய அரசாங்கம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தும் என்றும், கடந்த கால மனித உரிமை மீறல்களைக் கையாள ஒரு முறையான சுயாதீன விசாரணை மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறையை நிறுவுவதற்கான வாய்ப்பை இலங்கை இழக்காது என்றும் உயர்ஸ்தானிகர் நம்பிக்கை வெளியிட்டதாக வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது. (ம-7)

## முன்னாள் ஜனாதிபதி...

நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

நேற்று மு.ப. 11.30 மணி முதல் குறித்த சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீடு விவாதம் இடம்பெற்றதுடன், பி.ப. 3.30 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வாக்கெடுப்பில் சட்டமூலத்துக்கு ஆதரவாக 151 வாக்குகளும், எதிராக ஒரு வாக்கும் பதிவாகின. நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரினால் 2025 ஓகஸ்ட் 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த சட்டமூலம் 1986ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் சட்டத்தை நீக்குவதற்கான சட்ட மூலமாகும்.

நீக்கப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி முன்னாள் ஜனாதிபதிக்கு அல்லது முன்னாள் ஜனாதிபதியின் கைம்பெண்ணுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் வதிவிடம் அல்லது செலுத்தப்பட்ட மாதாந்த படி, நீக்கப்பட்ட சட்டத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி முன்னாள் ஜனாதிபதிக்கு அல்லது முன்னாள் ஜனாதிபதியின் கைம்பெண்ணுக்கு செலுத்தப்பட்ட மாதாந்த செயலகப் படித் தொகை, வழங்கப்பட்ட அலுவலக போக்குவரத்து மற்றும் அத்தகைய வேறு வசதிகள், நீக்கப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி முன்னாள் ஜனாதிபதியின் கைம்பெண்ணுக்கு செலுத்தப்பட்ட மாதாந்த ஓய்வூதியம் என்பன இரத்துச் செய்யப்படும்.

அத்துடன், "ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்)" சட்டமூலத்தில் சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன நேற்று பிற்பகல் தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார். இதற்கு அமைய குறித்த சட்டமூலம் 2025ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமாக நடைமுறைக்குவரும். (ம-7)

## மாகாண சபைத்...

அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலை இலங்கை அரசு நடத்த வேண்டும் என்று ஜெனிவாக் கூட்டத்தொடரில் இந்தியா முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்தொகுக்கப்பட்ட காலத்தில் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் கால எல்லை பற்றி எனக்கு உறுதியாகக் கூற முடியாது. அதற்குரிய சட்டதிருத்தங்களை நிறைவேற்ற வேண்டியுள்ளது. எனினும் கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே தேர்தல் நடத்தப்படும் என்றார். அத்துடன் பயங்கரவாதத் தடைச் சட்டம் பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

அந்தச் சட்டம் நிச்சயம் நீக்கப்படும் அதற்குரிய நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. நிகழ்நிலை காப்புச் சட்டமும் மறுசீரமைக்கப்படும் என்றார். (ம-7)


அழகு நிலைய உதவியாளர் தேவை

அழகு நிலைய உதவியாளர் (Beautician Assistant) தேவை. (பெண்)

தொடர்புகளுக்கு:

077 885 4905 (5377)

புதிய பிரிவுகள் ஆரம்பம் 13.09.2025

கணக்காளர் கற்கை நெறிகள்

Chartered Accounting Courses

Business Level I,II

Qualification:-G.C.E. A/L 3 Passes (Medium - Tamil & English)

வங்கியியல் கற்கை நெறிகள்

Banking Courses DBF & HDBF

Qualification:-G.C.E. A/L 3 Passes (Medium - Tamil & English)

Further Details:- Jaffna College Undergraduate Dept. Hospital Road, Jaffna. 0212223382 0774405917 (C-3845)




உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-3846)

V2 TRAVELS 076 1410725 076 8226236 v2vacancies@gmail.com

English Classes

உங்கள் வீடுகளில் தனி மற்றும் குழுவாகவும் அல்லது Zoom மூலமும் Gr 1 to O/L and for English beginners

♦Grammar

♦Spoken & School Syllabus

T.P: 077 33 14 608 (5382)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாப... இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவ்வச்சகத்தில் 11.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org